
ஸ்ரீ ராமாநுஜன் 308



ஆசிரியர்: ஸ்ரீகாஞ்சீ. P. B. அண்ணங்கராசாரியர்

ஸம்புடம் 26 | ப்ரமாதீச ஹு | பங்குனிமாத வெளியீடு | ஸஞ்சிகை 8

பாம்பேயில் சதாப்தி நிகழ்ச்சி.

ஸ்ரீ ஜகத்குரு காதி ஸ்வாமியின் சதாப்தீ மஹோத்ஸவம் பம்பாயில் (பனஸவாடி ஸ்ரீவேங்கடேச தேவஸ்தானத்தில்) 3—3—74 முதல் 12—3—74 வரை வெகு சிறப்பாக நடைபெற்றது. ப்ரதிதினமும் காலையில் யஜுஸ்ஸாம ஸஹஸ்ரநாம பாராயணங்கள் திருவீதி வலத்துடன் நடைபெற்றன. காலை மாலைகளில் உபய வேத பாராயணங்களும் நடைபெற்றன. தென்னாட்டிலிருந்து போந்த முப்பது ஸ்வாமிகள் இந்தகோஷ்டிகளைப் பரிமளிக்கச் செய்தனர். பகவத்விஷய ரஹஸ்யாதி பாராயணங்களும் இடம் பெற்றன. வடநாட்டு வித்வான்களால் ஸ்ரீ ராமாயண ஸ்ரீ பாகவத பாராயணங்கள் செய்யப்பட்டன. வால்மீகி ராமாயண உபந்யாஸமும் ஹிந்திபாஷையில் தினமும் வட நாட்டு வித்வான் ஒருவரால் நிகழ்த்தப்பட்டது. இரவு 7 மணிக்கு ஸ்ரீ ஸ்வாமி புறப்பாடு ஸன்னிதிக்குள் நிகழ்ந்தது. மாதுங்காவிலும் இரண்டிடங்களில் இந்த மஹோத்ஸவம் கொண்டாடப்பட்டது. ஸ்ரீமான் உ. வே. அக்காரக்கனி தி. அ. ஸம்பத்குமாராசாரியரின் (வித்வான், M.·A.) உபந்யாஸங்கள் நடைபெற்றன. சாற்றுமுறையன்று காலை கோயில், சோளஸிம்ஹபுரம் முதலிய திவ்யதேசங்களிலிருந்து வந்த திருப்பரியட்ட பஹுமானங்கள் ஸ்ரீ ஸ்வாமிக்கு ஸமர்ப்பிக்கப்பட்டன. இரவு ஸ்ரீஸோமானி குடும்பத்தாரின் இருப்பிடத்திற்கு அருகிலுள்ளதொரு உத்யானத்தில் பெருமாளுக்கு மண்டபப்படியாயிற்று. அது போழ்து தி. அ. அக்காரக்கனி ஸம்பத்குமாராசார்ய ஸ்வாமியின் உபந்யாஸம் நடைபெற்றது. ஸ்ரீஸ்வாமியின் திருக்குமாரரும் திருப்பேரனாரும் இவ் வுத்ஸவத்தை சிறப்புற நடத்திவைத்தனர். இப்படி இன்னும் பலபல விடங்களில் நடந்தன.

ஸ்ரீ:

பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்.

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ காஞ்சி ப்ரதிவாதி பயங்கரம்

அண்ணங்கராசாரியர் ஸ்வாமியின்

ப்ரமாதீச வருஷத்திய

மீன விசாகோத்ஸவப் பத்திரிகை

ஸ்ரீ ஸ்வாமியின் எண்பத்துமூன்றாவது திருநக்ஷத்ர பூர்த்தியை முன்னிட்டு

ஸ்ரீ காஞ்சியில் ஸ்வாமியின் திருமாளிகையில்

நாளது பங்குனி௴ 18௳ (31—3—74) முதல்
பங்குனி௴ 27௳ (9—4—74) வரை

வேதபாராயணம், திவ்யப்ரபந்தஸேவை, ரஹஸ்யாநுஸந்தானம், ஸ்தோத்ரபாடம், வித்வான்களின் உபந்யாஸம் இவை நடைபெறும். ஆப்தர்கள் அனைவரும் கூடியிருந்து சிறப்பாக நடப்பிக்கும்படி, ப்ரார்த்திக்கப் படுகிறார்கள்.

வேதபாராயண கோஷ்டி கடந்த ஸம்வத்ஸரங்களிற்போலவே யஜுர்வேதம் க்ரமாந்தம் திருவீதி வலத்துடன் நடைபெறும்.

இங்ஙனம்,

காஞ்சீபுரம்,
22—3—74.

ப்ரதிவாதிபயங்கரம் **செல்வமணி** என்கிற
ரங்கநாத தாஸன்.

SRI KANCHI MAHA VIDWAN JAGADACHARYA SIMHASANADHIPATHI

P. B. ANNANGARACHARYA SWAMI'S

EIGHTYFOURTH BIRTH DAY CELEBRATIONS

The Eightyfourth Birth day of Sri Swami is being celebrated this year at his residence in Kanchi from 31—3—74 to 9—4—74. Vedas, Divya Prabandhams, Stotras and Rahasyas will be chanted. Procession of the Veda Goshti and lectures will also take place as usual.

You are cordialy invited to attend,

Kanchipuram,
22—3—74.

CHELLAMANI alias
P. B. Ranganathacharya.

எனது இரவு நினைவுகள்

(முன் தொடர்ச்சி)

மைஸூர் கஸ்தூரி ரங்காசார்ய ஸ்வாமியின் நினைவு

என்னுடைய வித்யார்த்திதசையில் மைஸூரில் பண்டிதரத்னமென்று ப்ரஸித்தரான ஸ்ரீமத் கஸ்தூரி ரங்காசாரியர் ஸ்வாமி திருமலை யாத்திரையாக வெழுந்தருளினவர் காஞ்சீபுரிக்கும் விஜயம் செய்திருந்தார். அவரோடுகூட மைஸூர் அரசாங்கத்து அதிகாரிகளும் சிலர் வந்திருந்தார்கள். தேவப்பெருமாள் ஸந்நிதிக்குள் நடந்துவந்த சடகோப நிலய பாடசாலையில் ஒரு நாள் பரீக்ஷா ஸதஸ்ஸு நடத்தினார்கள். அப்பாடசாலையில் வாசிக்கிற வித்யார்த்திகளை மட்டுமல்லாமல் பிறவிடங்களில் வாசிக்கிற (ஸம்ஸ்க்ருத) வித்யார்த்திகளையும் வருவித்துப் பரீக்ஷை நடத்தினார்கள். அதற்கு நானும் போயிருந்தேன். உத்துங்கவித்யார்த்திகளைத் தனியாகவும் கீழ்வகுப்பு வித்யார்த்திகளைத் தனியாகவும் உட்கார வைத்துப் பரீக்ஷைநடத்தி வருகிறார்கள். முராரி நாடகத்தில் பரீக்ஷை நடந்து கொண்டிருக்கிறது. அதில் முதல் அங்கத்தின் முடிவிலுள்ள 'யதிந்த்ரோபநேதி வ்யஸநமுதயம் வா நிதிரயம்'' என்கிற சுலோகத்தில் ஓர் உத்தமவித்யார்த்தி பரீக்ஷைசெய்யப்படுகின்றார்; அவர்க்கு ச்லோகமே உபஸ்திதியில்லை. அதனால் அவர் மிகவும் சிரமப்படுகிறார். அப்போது சிறுமாணுக்கர்திரளில் உட்கார்ந்திருந்த யான் ''அதை நான் சொல்லுகிறேன்'' என்றேன். அப்பாடசாலையின் தலைமையுபாத்யாயரான சாமா திருமலை தாதாசாரியர், அடியேன் ஏதோ வம்பு பேசுவதாக நினைத்து ''கழுதே! வாயைமூடியிரு'' என்று அதட்டினார். பரீக்ஷகரான கஸ்தூரி ஸ்வாமி ''சொல்லப்பா! பார்ப்போம்'' என்றார். உடனே யெழுந்து அந்த ச்லோகத்தைப் பூர்த்தியாகச் சொல்லி அர்த்தமும் தாத்பரியமும் விரியச்சொல்லி முடித்தேன். அப்போது ''காவ்ய பாடம் வாசிக்கிற உனக்கு இந்த ச்லோகம் எப்படித் தெரிந்தது?'' என்று கஸ்தூரி ஸ்வாமி கேட்டார். ''என் க்ருஹத்தில் எனது தகப்பனாரிடத்தில் பலபேர்கள் வாசிக்கிறார்கள்; அவர்களில் முராரி நாடகம் வாசிப்பவர்களு முண்டு; அவர்கள் வாசிக்கும்போது நான் கூடவிருந்து கேட்டுக்கொண்டிருப்பது வழக்கம்; அதனால் தெரிந்தது'' என்றேன். 'அவரவர்கள் வாசிக்கிற எல்லா க்ரந்தங்களிலும் நீ பரீக்ஷை சொல்லுவாயா?' என்று கேட்டார். ''நிச்சயமாகச் சொல்ல முடியாது; அனேகமாய்ச் சொல்லுவேன்; கேட்டுப் பார்க்கலாமே'' என்றேன். பிறகு மற்ற வித்யார்த்திகளை விட்டுவிட்டு என்னை மட்டும் விசேஷமாகப் பரீக்ஷித்தார்கள். அவர்கள் த்ருப்தி யடையும்படியாகவே சொல்ல இயன்றது.

தங்கக் காப்பு அண்ணா

பிறகு பரீக்ஷிதர்களுக்கு ஸன்மானம் செய்யும்போது ஒரு ரூ. இரண்டு ரூ. மூன்று ரூ. உத்தரீயம், புத்தகம்.........இப்படியாகக் கொடுத்தார்கள். அடியேனுக்கு இரண்டு பவுன் கொண்ட டாலர் ஒன்று கொடுத்தார்கள். அதைக்கொண்டு தாய் தந்தையர் எனக்குத் தங்கவளை செய்வித்துக் கரபூஷணம் போட்டார்கள். அதை யான் 26, 27 வயது வரையில் அணிந்துகொண்டிருந்தேன். அதனால் ''தங்கக் காப்பு அண்ணா'' என்றே எனக்குப் பெயர் வழங்கி வந்ததப்போது. காவ்ய நாடக

அலங்காரக்ரந்தங்களை எனக்கு மேல்வகுப்பினர்கள் வாசிக்கும்போதுகளில் உடனிருந்து கேட்டது, பிறகு அந்த க்ரந்தங்களை யெல்லாம் தனியாகவும் வாசித்தது ஆகிய விவற்றால் அடியேனுக்கு காவ்ய—சம்பூ—நாடக அலங்கார க்ரந்தங்களின் உபஸ்திதி அதிகமாகவுண்டாயிற்று. இடையில் பலவருஷங்கள் அவற்றை ஸ்மரிக்கவும் ப்ரஸக்தியில்லாமலிருந்துங்கூட இற்றைக்கும் அவற்றின் உபஸ்திதியைப் பெரும்பாலுமுடையேன். இவ்விஷயத்தில் அடியேன் மூவரிடத்தில் தினந்தோறும் க்ஷணந்தோறும் உபகாரஸ்ம்ருதி செலுத்திக்கொண்டிருக்கிறேன்; 1. திருத்தகப்பனார்; 2. (மாத்வ) ராமசந்த்ராசார்; 3. அவருடைய ஸஹோதரர் வித்யாசார் ஆகிய இம்மூவரும் என்னுடைய நித்ய க்ருதஜ்ஞதா பாத்ரபூதர்கள். திருத்தகப்பனார் சொல்லிக்கொடுத்ததில் ஆச்சரியமில்லை; ராமசந்த்ராசாரும் வித்யாசாரும் புத்ரநிர்விசேஷமாகப் பாடங்கள் சொல்லிவைத்ததை நான் நினையாத க்ஷணமில்லை. அவர்களுடைய போதநாசக்தி நிகரற்றது. அவர்களை அடிக்கடி நினைக்கிறேன்.

திருக்கண்ணபுரம் பட்டப்பா ஸ்வாமி நினைவுகள்

என்னுடைய இருபது பிராயத்தில் திருக்கண்ணபுரம் பட்டப்பாஸ்வாமீ ப்ரஸித்தவித்வானாக எழுந்தருளியிருந்தவர் சென்னைமாநகரில் ப்ரவசனங்கள் செய்யத் திருவுள்ளம்பற்றி அஸ்மத் மாதாமஹ ஜீயர்ஸ்வாமி நியமனம் பெற்றுப் போகலாமென்று காஞ்சிக்கு எழுந்தருளி ஸ்வாமி மடத்திலேயே நாலைந்துநாள் தங்கியிருந்தார். அந்த ஸ்வாமி ஒரு விலக்ஷணவ்யக்தி அப்போது அந்த ஸ்வாமியோடு அடியேனுக்கு மிகவும் நெருங்கின பரிசயம் ஏற்பட்டு அது திநேதிநே அபிவிருத்தியடைந்து அடிக்கடி அவரை யுத்தேசித்து அடியேன் சென்னைக்கு விடைகொள்வதும், அடியேனை யுத்தேசித்து அவர் காஞ்சிக்கு எழுந்தருள்வதுமாய் ஸந்நிகர்ஷம் ப்ரபலப்பட்டுவிட்டது. அந்த ஸ்வாமி சென்னை தங்கசாலைத் தெருவில் ஜாகை அமைத்துக்கொண்டு இரண்டு மூன்று சாரிடிகளில் உபந்யாஸங்கள் ஸாதிக்கத் தொடங்கினார். அப்போது அடியேன் அடிக்கடி அங்குச் சென்றிருப்பேன். அந்த ஸ்வாமியின் நியமனத்தினால் அங்கே உபந்யாஸங்களும் செய்வேன். அவ்விடத்திலேயே ஸ்திரவாஸம் செய்யும்படி அவ்விடத்து பக்தர்கள் பலர் கேட்டுக்கொள்வர்கள்; அப்போது அடியேன் வித்யார்த்தி தசையிலே யிருப்பவனாதலாலும் நகரவாஸத்தில் ருசியற்றவனாதலாலும் அதற்குச் சிறிதும் இணங்கிற்றிலேன்.

பண்டிட் லக்ஷ்மணாசார் ப்ரஸ்தாவம்

அப்போது அவ்விடத்தில் அதே வீதியில் பண்டிட் லக்ஷ்மணாசார் கீதையுபந்யாஸம் செய்து கொண்டிருந்தார்; பட்டப்பாஸ்வாமி அவ்விடத்தில் உபந்யாஸம் ஸாதிக்க ஆரம்பித்த பிறகு லக்ஷ்மணாசாருடைய கோஷ்டி குறையத் தொடங்கிற்று; பட்டப்பாஸ்வாமி ஆழ்வார்களின் ஸ்ரீஸூக்திகளினால் ஜனங்களை ஆவர்ஜனம் செய்கிறாரென்று தெரிந்து கொண்ட லக்ஷ்மணாசார் தாமும் ஆழ்வார் ஸ்ரீஸூக்திகளில் பரிசயத்தை ஸம்பாதித்துக் கொண்டு மறுபடியும் சென்னைக்கு வருவதாகச் சொல்லிப்போய் அப்படியே இரண்டு மூன்று வருஷகாலம் ஸ்வஸ்தானத்திலிருந்து கொண்டு சில ஸ்ரீவைஷ்ணவ பண்டிதர்களைத் துணைகொண்டு திவ்யப்ரபந்தத்தில் சிலசில பாகங்களைத் தாம் அதிகரித்து வியாக்கியானங்களையும் ஸேவித்து மறுபடியும்

சென்னைமாநகர் வந்து முதன்முதலாக அமலனாதிபிரான் உபந்யஸித்தார்: திருப்பாவையும் உபந்யஸித்தார். பெரியவாச்சான்பிள்ளை கனவிலே தமக்கு ஸாக்ஷாத்காரமளித்து அர்த்தவிசேஷங்களை உபதேசித்தருளினதாக ஸதஸ்ஸில் அடிக்கடி சொல்லுவராம். பழையபடியே பக்தர்கள் அவரிடத்திலும் ஈடுபட்டு உபந்யாஸங்கள் கேட்டு வந்தார்கள். அவருடைய பரிசயம் மிகவுமிருந்தது.

ஸ்ரீமத் பரமஹம்ஸ-சின்னகலியன் ஸ்வாமி பற்றிய நினைவுகள்

ஸ்ரீமத்பரமஹம்ஸேத்யாதி. சின்ன கலியன் ஸ்வாமியென்று தேசமெல்லாம் பரந்த பெரும் புகழுடைய ஸ்ரீமத். வானமாமலைஸ்வாமி முதல்தடவையாகப் பெரிய யாத்திரை புறப்பட்டருளிக் காஞ்சீப்ராந்தம் எழுந்தருளியாகிறது. அப்போது அடியேன் ஸம்ப்ரதாய சந்த்ரிகாதி க்ரந்த முத்ரணத்தில் தத்பரனாயிருந்தபடியால் அப்போது அச்சிட்டிருந்த புஸ்தகங்களில் ஒவ்வொரு பிரதியை ஸ்ரீஸ்வாமி ஸன்னிதிக்கு அனுப்பியிருந்தேன். ஸம்ப்ரதாய சந்த்ரிகைக்கு விஸ்தாரமான பூமிகையும் விசேஷ டிப்பணியும் எழுதிச் சேர்த்திருந்தேன். அவற்றை ஸ்ரீஸ்வாமி கடாக்ஷித்தருளித் திருவுள்ளம் போரவுகந்து "குகனோடுங் கங்கைதன்னில் சீரணிந்த தோழமை கொண்டது மோரடையாளம்" என்பதற்கீடான முறையிலேயே நிரவதிகாநுக்ரஹம் செய்தருளினர். அதை ப்ரீதியென்பதா? ப்ரேமமென்பதா? கருணையென்பதா? நேசமென்பதா? இன்னதென்று சொல்லத் தெரியவில்லை. அந்தஸ்வாமி திருநாட்டுக்கெழுந்தருளி நாற்பத்தைந்துவருஷங்களுக்குமேலானாலும் "ராம ஸுக்ரீவயோரைக்யம்" என்னும்படியான அந்த நிலையை அறியுமுலகெல்லாம். ஸ்ரீ ஸ்வாமியின் பரமக்ருபைக்கு இலக்காகப்பெற்ற ஸந்தர்ப்பங்கள் பலபலவுண்டு.

ஸ்ரீமத் சின்னகலியன் ஸ்வாமி திருவருள் விளக்கம்

சின்னகலியன் ஸ்வாமி தெற்கு ப்ராந்தத்திற்கு மூன்றுவிசை யெழுந்தருளின யாத்திரைகளில் முதல் யாத்திரையில் மட்டுமே காஞ்சிக்கு எழுந்தருளினர்; மற்ற இரண்டு யாத்திரைகளில் ஒரு பரியாயம் சிங்கப்பெருமாள் கோயிலிலும், மற்றொரு விசை திருநின்றவூரிலும் சிலநாள் தங்கியிருந்து அவ்விடங்களிலே அடியேனைப் பரமக்ருபையோடும் நிரதிசய ப்ரீதியோடும் வரவழைத்தருளி விசேஷ அநுக்ரஹங்கள் செய்தருள ப்ராப்தமாயிற்று. அப்போதே அடியேன் பல துறைகளில் பலநூல்களை யெழுதி யச்சிட்டு வெளியிட்டுக் கொண்டிருக்கிறேன். அவற்றை யெல்லாம் ஒன்று விடாமல் ஸ்ரீ ஸ்வாமி கடாக்ஷித்தருள்வதும் திருவுள்ளவுகப்புக்குப் போக்கு வீடாகக் கருணாபரிணாமமான ஸ்ரீமுகங்களை யநுக்ரஹித்தருள்வதுமாயிற்று. அனேக க்ரந்தங்களின் முத்ரணத்திற்காக ஸ்ரீ ஸ்வாமி பொருளுதவி புரிந்ததும் அப்ரமேயம். விஜ்ஞான சிந்தாமணி, மஞ்ஜுபாஷிணி முதலான ஸம்ஸ்க்ருத பத்ரிகைகளையெல்லாம் ஸ்ரீஸ்வாமி வரவழைத்துக் கடாக்ஷித்தருள்வது வழக்கம். ஸம்ஸ்க்ருத சந்த்ரிகா, மித்ரகோஷ்டி, ஸஹ்ருதயா திநீ என்கிற பெயர்களால் அப்போது ஸம்ஸ்க்ருத பத்ரிகைகள் பலபல நடந்துகொண்டிருந்தன. அக்காலத்தில் அடியேனுடைய வியாஸங்களில்லாத பத்ரிகை காணக்கிடைக்காது. அந்த வியாஸங்களை யெல்லாம் விடாது கடாக்ஷித்தருள்வதனால் ஸ்ரீஸ்வாமிக்கு அடியேனிடத்தில் புத்ரவாத்ஸல்யத்தினும் மிகுந்த வாத்ஸல்யமே உண்டாயிற்று. அதையெல்லாம் நன்கு அறிந்தவர்

கள் வானமாமலையில் இன்றைக்கும் சில வித்வான்களிருக்கலாம்; வர்த்தமானபீடாதிபதியான ஸ்ரீமத் சின்னராமாநுஜ ஜீயர் ஸ்வாமி அன்னவர்களில் தலைவர். அப்போது சின்னகலியன் ஸ்வாமி திருவடிவாரத்தில் வித்வத்ஸிம்ஹங்களாகப் பத்தெட்டு ஸ்வாமிகள் விளங்கிக் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய யோக்யதைகளில் ஏகதேசமும் அடியேனுக்கு இல்லையாயிருக்கச்செய்தேயும், ஸார்வபௌமனுக்கு ஜகந்யவ்யக்தி விசேஷத்திலும் காதல் விளையுங் கணக்கிலே சின்னகலியன் ஸ்வாமிக்கு அடியேன்பாலுண்டானபரமக்ருபையை எடுத்துரைக்கும் சப்தமொன்றுமறிகின்றிலேன். ஆசார்ய ஹ்ருதயத்தில் "காதல் அன்பு வேட்கை அவாவென்னும் ஸங்ககாமாநுராக ஸ்நேஹாத்யவஸ்தா நாமங்கள்" என்று அருளிச் செய்கிற கட்டளையிலே காதலென்பேனு? அன்பு என்பேனு? வேட்கை யென்பேனு? அவாவென்பேனு? ஒன்றுமறியேன். அது வொரு காலவிசேஷம்.

ஸ்ரீ ஸ்வாமியின் நியமனங்கள்

அப்போதைய ஸம்ஸ்க்ருத பத்ரிகைகளில் அடியேனுடைய கத்யபத்யரசனையெல்லாம் கடாக்ஷித்தருளாநின்ற ஸ்ரீ ஸ்வாமி (சின்ன கலியன் ஸ்வாமி) யாத்திரையடைவில் திருநின்றவூரில் அடியேனை வரவழைத்து "அண்ணு! இந்த ரசநாஸாமர்த்தியத்தை நீர் திவ்ய ப்ரபந்தங்களிலும் ரஹஸ்ய க்ரந்தங்களிலும் உபயோகப்படுத்திஞல் வடநாட்டுக்கு மஹோபகாரம் செய்ததாகுமே" என்று நியமித்தருளினர்; 'ஸ்வாமியின் அநுக்ரஹமிருந்தால் அப்படியே யாகிறது' என்று விஜ்ஞாபித்தேன். உடனே ஸ்ரீஸ்வாமி, ரஹஸ்யத்தில் ஒரு சூர்ணையையும் திவ்யப்ரபந்தத்தில் இரண்டு பாசுரங்களையும் ஸாதித்து 'இவற்றை ச்லோகமாகச் செய்யும், பார்ப்போம்' என்று நியமித்தருளினர். அடியேனுடையவாழ்க்கையில் இது ப்ரஹ்மானந்த ஸந்தோஹமயமானதொரு ஸம்பவமாகையாலே இதைச் சிறிது விவரித்தெழுதுகிறேன்.

பதினைந்தாவது பிராயத்திலிருந்தே அடியேன் ஆசார்ய ஹ்ருதயத்தில் ஆழங்காற்பட்டவன். இது ஸ்ரீஸ்வாமிக்கும் நன்கு தெரியுமாதலால் அந்த மஹாக்ரந்தத்தில் "போக்ய பாகதவரை தெளிந்த சந்தைக்கு முன்னில் மூன்றிலும் ப்ரகடம்" என்றுள்ள சூர்ணையைத் தம்மெதிரிலேயே ச்லோகமாக்கி விண்ணப்பம் செய்ய நியமித்தருளினர். இந்த சூர்ணையின் ப்ரமேயம் இன்னதென்பதைச் சற்று விவரிக்கிறேன். ஆசார்யஹ்ருதயத்தில் மூன்றும் ப்ரகரணத்தில் *வன் பெருவானக முதலுய்ய* என்கிற சூர்ணை தொடங்கி இருபத்தெட்டு சூர்ணைகளிஞல் நம்மாழ்வார் திருவாய்மொழியாயிரத்தில் மங்களாசாஸனம் செய்த திருப்பதிகளில் விளங்கும் திருக்குணங்கள் ஆச்சரியமாக அநுபவிக்கப்படுகின்றன. ஒன்பதாம்பத்தில் இரண்டாம்பதிகமாகிய *பண்டைநாளாலே* என்கிற திருவாய்மொழியில் திருப்புளிங்குடி, வரகுணமங்கை, ஸ்ரீவைகுண்டம் என்னும் மூன்று திருப்பதிகள் மங்களாசாஸனம் செய்யப்பட்டனவாதலால் அம்மூன்று தலங்களிலும் விளங்கும் குணத்தை ஒரே சூர்ணையிஞல் அருளிச்செய்தார் ஆசார்யஹ்ருதயகாரர். [அதுதான் *போக்யபாகத்வரை* இத்யாதி.] இதன் கருத்து யாதெனில்; ஒருவனுக்குக் கனத்த பசியிருந்தால் அவன் அன்னம் பக்குவமாவதற்கு முன்னே பதற்றத்திஞல் அன்னம் பக்குவமாகிற விடத் தருகே வந்து சற்றுப்போது அங்கே படுத்திருப்பதும் சற்று உட்கார்ந்திருப்பதும், சற்று நின்றுகொண்டே 'ஆச்சா ஆச்சா' என்பதுமாய்த் தவிப்பன். அப்படியே

ஆழ்வாராகிற பரமபோக்யமான அன்னத்தையநுபவிப்பதிலே பெரும்பசியனான எம்பெருமான் (அவர்க்குப்) பரமபக்தியாகிற பாகம் பக்குவமாவதற்கு முன்பு (அவரை) அநுபவித்துப் பசிதீர முடியாமையாலே 'அந்த பரமபக்தி பக்குவமாயிற்றா ஆயிற்றா?' என்று பதற்றங்கொண்டு திருப்புளிங்குடியிலே சயனிப்பதும், வரகுணமங்கையிலே வீற்றிருப்பதும், ஸ்ரீ வைகுண்டத்திலே நிற்பதுமாகிறானும்; இப்படிப்பட்ட த்வராதிசயம் இம்மூன்று திருப்பதிகளிலும் வ்யக்தம்—என்பது இந்த சூர்ணையின் கருத்து. போக்ய—போக்ய பூதரான ஆழ்வாருடைய, பாக—பக்தி பரிபாகத்தைப் பற்றிய, த்வரா —எம்பெருமானுடைய பதற்றமானது. தெளிந்த சந்தைக்கு மூன்றில் மூன்றிலும்—'தெளிந்த வென் சிந்தை யகங்கழியாதே' என்ற அடிக்கு முன்னடியான *புளிங்குடிக் கிடந்து வரகுணமங்கையிருந்து வைகுந்தத்துள் நின்று* என்னு மடியில் கூறப்பட்டுள்ள மூன்று திருப்பதிகளிலும், ப்ரகடம்—வ்யக்தம் என்று பதப்பொருள் காண்க. இவ்வளவு பொருளைக் கொண்டிருக்கின்ற சூர்ணையை ச்லோகமாக்கிச் சொல்ல வேணுமென்று நியமனமாயிற்று. உடனே ஒரு காகிதம் வாங்கி ச்லோகத்தை யெழுதித் திருவடிகளில் ஸமர்ப்பித்தேன். அடியேன் எழுதின ஆசார்ய ஹ்ருதயஸாரத்தின் 1933 ஸ்ரீ முக வருஷத்துப் பதிப்பில் (பக்கம் 150-ல்)

> "இந்த சூர்ணிகையை ஒரு ஸம்ஸ்க்ருத ச்லோகமாக மொழிபெயர்க்க வேணுமென்று ஒருகால் ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி. வானமாமலை சின்ன கலியன் ஜீயர் ஸ்வாமி நியமித்தருளினபோது அடியேன் விண்ணப்பம் செய்த ச்லோகம் வருமாறு"

என்று மகுடமிட்டு அந்த ச்லோகத்தை முத்ரணம் செய்திருக்கிறேன்; அதாவது,

> போக்யபூத சடகோப யோகினோ பக்திபாக விஷயம் த்வராம் ஹரி:,
> வந்தி ஸங்கிஹித மந்திரத்ரயே தல்பசாய்யுபவிசம்ச்ச தஸ்திவாங்.

என்பதே அந்த ச்லோகம்; இதனை ஸ்ரீ ஸ்வாமி கடாக்ஷித்தருளி அங்கிருந்த வித்வான்களுக்குத் தாமே வாசித்துக் காட்டியருளி "மூல சூர்ணையின் தாற்பரியத்தை இந்த ச்லோகத்தினால்தான் தெள்ளிதாக அறிந்துகொள்ள முடிகிறது" என்று ஸாதித்தருளின வார்த்தை.

இந்த சூர்ணையோடுகூட ஆழ்வார் பாசுரங்களிரண்டையும் ச்லோகமாக்கும்படி நியமித்தருளினதாக விஜ்ஞாபித்தேனே, அவற்றுள் முதற்பாசுரம் பெரியாழ்வார் திருமொழி 3-8 4.

> "ஒருமகள் தன்னையுடையேன் உலகம்நிறைந்த புகழால்
> திருமகள்போல வளர்த்தேன் செங்கண்மால் தான்கொண்டுபோனான்
> பெருமகளாய்க் குடிவாழ்ந்து பெரும்பிள்ளை பெற்றவசோதை
> மருமகளைக்கண்டுகந்து மணாட்டுப்புறம் செய்யுங் கொலோ".

இப்பாசுரத்திற்கு அடியேன் அப்போது விஜ்ஞாபித்த மொழிபெயர்ப்பு ச்லோகத்தையும் அடியேனது திவ்யார்த்த தீபிகையுரையில் அப்பாட்டின் தீபிகையில்

(முதற்பதிப்பில் பக்கம் 224—ல்) இரண்டாவது பதிப்பில் பக்கம் 314-ல் ஸ்ரீ வான மாமலை ஸ்வாமி நியமனத்தையும் அங்கு ச்லோகத்தின் தலைமேற் பதிப்பித்திருக்கிறேன்.

ஏகாமேவ ஸுதாம் அஜீஜநமஹம் த்ரைலோக்ய பூர்ணப்ரதாம்
புஷ்ணுபி ஸ்ம ரமாமிவ, அஹரதிமாம் ரக்தாங்க நேத்ரஸ் ஸ்வயம்,
காம்பீர்யாட்ய குடும்பிநீ ஜநிதஸத்புத்ரா யசோதாஹ்வயா
த்ருஷ்ட்வா ஹ்ருஷ்டமநா: ஸ்நுஷாம், விதநுயாத் வைவாஹிகம் வா க்ரமம்.

என்பதே அந்த ச்லோகம். ஸ்ரீ ஸ்வாமி நியமித்த மற்றொரு பாசுரமாவது—பெரியாழ்வார் திருமொழியிலேயே 5-3-6

எருத்துக் கொடியுடையானும் பிரமனு மிந்திரனும் மற்று
மொருத்தரு மிப்பிறவி யென்னும் நோய்க்கு மருந்தறிவாருமில்லை
மருத்துவனாய் நின்ற மாமணிவண்ணா மறுபிறவி தவிரத்
திருத்தி*உன்கோயில் கடைப்புகப்பெய் திருமாலிருஞ்சோலை யெந்தாய்.

இப்பாசுரத்திற்கு மொழிபெயர்ப்பாக விஜ்ஞாபித்த ச்லோகமாவது—

நேசாநோ வ்ருஷபத்வஜோ நச புநர் வேதா நசேந்த்ரோ நசாப்
யந்ய: கோபி ஜநோஸ்ய ஸம்ஸ்ருதி மஹா ரோகஸ்ய வேத்த்யௌஷதம்,
ஸ்வாமிந் வைத்யமணே மணிப்ரப! புநர்ஜந்மாபநீயாத மாம்
யுஷ்மந்மந்திர வாஸிநம் குரு ஹரே ஸ்ரீ காநநாத்ரி ப்ரபோ, என்பதாம்.

இதுவும் அடியேனுடைய திவ்யார்த்த தீபிகையில் முதற்பதிப்பில் (பக்கம் 406-ல் இரண்டாவது பதிப்பில் பக்கம் 493-ல்) முத்ரணம் பெற்றுள்ளது. இவ்விதமான ச்லோக மொழிபெயர்ப்புத் தொண்டை விசேஷமாகச் செய்துவந்தேன். திருவாசிரிய மேழுபாட்டையும் ஏழு தண்டகமாகவும், திருவெழுகூற்றிருக்கையைப் பெரியதொரு தண்டகமாகவும் சிறிய திருமடலையும் பெரிய திருமடலையும் ஆர்யையில் இருநூறு ச்லோகங்களாகவும் மொழிபெயர்த்துள்ளேன். இவை தவிர இன்சுவைபொடிந்தெடுத்த பலநூறு பாசுரங்களை (ஏறக்குறைய ஆயிரம் பாசுரங்களை) ச்லோகமாக்கியுள்ளேன் இவையெல்லாம் முதலில் க்ரந்த லிபியில் அச்சிடப்பட்டு, பிறகு தேவநாகரலிபியில் விவரணத்தோடும் அச்சிடப்பட்டுள்ளன.

ஸ்ரீ வானமாமலை ஸ்வாமி ஸந்நிதியிலே யிருந்த ஆஸ்தான வித்வானொருவர் *கலையுங் கரியும் பரிமாவும்* என்கிற திருமங்கையாழ்வார் பாசுரத்தை அதே யிசை நடையில் ஸம்ஸ்க்ருத ச்லோகமாக்கிச் சொல்லுவீரா? என்றார். அப்போதே திருநின்றவூரிலேயே உடனே விண்ணப்பம் செய்து கொண்டேன்.

பெரிய திருமொழி 1-5-1

கலையுங்கரியும் பரிமாவும் திரியுங்கானம் கடந்து போய்ச்
சிலையுங் கணையுந் துணையாகச் சென்றான் வென்றிச் செருக்களத்து
மலைகொண்டலை நீரணைகட்டி மதிள் நீரிலங்கை வாளரக்கர்
தலைவன்*தலைபத்தறுத் துகந்தான் சாளக்கிராம மடைநெஞ்சே.

(இப்பாட்டுக்கு மொழிபெயர்ப்பாக இதே யிசைநடையில் விஜ்ஞாபித்த ச்லோகம்)

ஹரிணே: கரிபிஸ் துரகைச்ச வ்யாப்தா மடவீம் அதியங் ஸங்
தநுஷா விசிகைஸ் ஸஸஹாயோ கதவாங் ஜயதாம் ரணபூமிம்,
கிரிபிர் ஜலதௌ க்ருதஸேது: தசவக்த்ர சிராம்ஸி தச வ்யலுநாத்
பகவாங் ஸஹி யத்ர விராஜதி தம் ஸாலக்ராமம் பஜ சித்த.

இந்த ச்லோகமும் அடியேனுடைய பெரியதிருமொழி **ஸம்ஸ்க்ருதாநுவாதத்தில்** *(ப்ருஹத்ஸூக்தாபரநாமதேய ஸ்ரீ பரகாலஸூரிஸூக்தத்தில்) பக்கம் 24ல் காண்க.*

சின்னகலியன் ஸ்வாமியின் க்ருபாப்ரவாஹபரீவாஹங்கள்

ரஹஸ்ய க்ரந்தங்களையும் ச்லோக ரூபமாக மொழி பெயர்க்கும்படி ஸ்ரீஸ்வாமி நியமித்தருளினதைச் சிரமேற்கொண்டு ஸ்ரீவசநபூஷணம் தத்வத்ரயம் முமுக்ஷுப்படி ஆகிய மூன்று ரஹஸ்யங்களையும யதாவகாசம் இரண்டொரு மாதங்களில் ச்லோகமாக்கி முடித்தேன். அந்த ஸமயத்தில் ஸ்ரீமத் ஸ்வாமி (சின்ன கலியன் ஸ்வாமி) வடதேச யாத்திரை யெழுந்தருளியிருந்தார். எவ்விடத்தில் எழுந்தருளியிருக்கிறாரோ அவ்விடத்தில் நேரேவிடைகொண்டு இந்த ஸம்ஸ்க்ருத அநுவாதங்களை ஸ்வாமி ஸன்னிதியில் பூர்த்தியாக வாசித்துக் காட்டவேணுமென்கிற குதூஹலமுண்டாயிற்று. அதுவரையில் அடியேனுக்கு வடதேசயாத்திரை ப்ராப்தமானதில்லை. அடியேனுக்கு பதரிகாச்ரம யாத்திரை மூன்று பர்யாயமும், ஹரித்வார ஹ்ருஷீகேசம் வரையில் யாத்திரை இருபத்திரண்டு பர்யாயமும் ப்ராப்தமாகியிருக்கிறது. வடநாட்டு யாத்திரையிலெழுந்தருளியிருக்கின்ற சின்ன கலியன்ஸ்வாமியை ஸேவிப்பதற்கென்றே ஒரு பயணம் புறப்பட்டேன். அதுதான் அடியேனுடைய முதல்தடவையான வடநாட்டு யாத்திரை.

பாட்னநகரில் ஸ்வாமி ஸன்னிதிக்கு விடை கொண்டது

அப்போது சின்ன கலியன் ஸ்வாமி பாட்னவில் (Deegha Ghat) தீகா காட்டென்னுமிடத்தில் பரிஜந பரிவாரங்களோடும் பத்து வித்வான்களோடும் விசேஷச் சிறப்புடன் எழுந்தருளியிருக்கிறார். **தீகாகாட்** என்னுமிடத்தை நம் தேசத்தவர்கள் பலர் பார்த்திருக்கமாட்டார்களென்று நினைக்கிறேன். **தீர்க்க கட்டம்** என்பதே 'தீகா காட்' என வழங்கப்படுகிறதுபோலும். அங்கே பெருகுகின்ற கங்கை நாலு மைல் அகலமுள்ளது. ஸமுத்ர மென்னவேணுமே யொழிய நதி யென்னமுடியாது. அந்த கங்கையின் கரையிலேயே ரம்யமானதொரு ஹர்ம்யத்தில் ஸ்ரீ ஸ்வாமி யெழுந்தருளியிருக்கிறார். அவ்விடம் சென்று சேர்ந்து ஸ்ரீ ஸ்வாமி திருவடிவாரத்தில் ஒரு வாரம் வாழ்ந்திருந்தேன். ஆஸ்தான வித்வான்கள் பலருமங்கு ஸேவைஸாதிக்கிறார்கள். அந்த ஸங்நிவேசத்தை நினைக்கும்போதே அடியேனுடலம் புலகாங்கிதமாகிறது. அலையாருங்கடல்போல் முழங்கும் கங்கையை வாசலில் கண்டு கொண்டிருந்தாலும் பசி தோன்றாது. காலை மாலை வேளைகளில் ஸ்ரீ ஸ்வாமியின் உபயவேதாந்தப்ரவசனம் ஹிந்தியிலும், ஸம்ஸ்க்ருதத்திலும் ஆச்சரியமாக நடைபெறுகின்றது. சாதுர் மாஸ்ய ஸங்கல்பஸமயமது. "ஸ்வாமி நியமித்தருளினபடி மூன்று ரஹஸ்யங்களையும் ச்லோக ரூபேண மொழி பெயர்த்துக்கொண்டு வந்திருக்கிறேன். பூர்த்தியாகத் திருச்செவி

சாத்தியேயாக வேணும்'' என்று விஜ்ஞாபித்தேன். காலை மாலை காலக்ஷேபத்தையும் நிறுத்தி இதையே வாசித்துக்காட்ட நியமனமாயிற்று. அங்குள்ளாரனைவரும் கூடியிருந்து கேட்கவேணுமென்றும் கட்டளை யிட்டருளியாயிற்று. ஏழெட்டு நாள் இவ்வரங்கேற்றமே போது போக்காக நிகழ்ந்தது.

அங்கே அரங்கேற்றப்பெற்ற அந்த ரஹஸ்யாநுவாத ச்லோகமாலைகளுக்கு ஸ்ரீ ஸ்வாமி, ''ரஹஸ்யரத்னமாலிகா'' என்று பெயரிட நியமித்தருளி, இதை விரைவில் அச்சிட வேண்டியதென்றும் நியமித்தருளினர். தெலுங்கு லிபியில் மேலே தமிழ் மூலமும். கீழே சுலோகமுமாக அச்சிடப்பட்டது. பிறகு கேமராஜ ஸேட்டின் பௌத்ரனால் தனது அச்சுக்கூடத்தில் தேவநாகரலிபியில் வெகு நேர்த்தியாக 2000 பிரதிகள் அச்சிடப்பட்டுள்ளது.

திவ்யார்த்த தீபிகைக்குத் தடையும் விடையும்.

திவ்யப்ரபந்த திவ்யார்த்த தீபிகையுரை எழுதி வெளியிட ஆரம்பித்தது ஏறக்குறைய அறுபது வருஷமாகிறது. அப்போது மாதந்தோறும் 40 பக்கம் கொண்ட ஒவ்வொரு ஸஞ்சிகையாக வெளியிட்டுவந்தேன். (சென்னை M. R. கோவிந்தசாமியின் ஸம்பந்தம் நேரிடாதகாலம் அது.) ப்ரதிமாத ஸஞ்சிகையாக வெளியிட்டு வந்த காலத்தில் ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி சின்ன கலியன் ஸ்வாமி ஸன்னிதிக்கும் அனுப்பி வந்தேன். ஸ்வாமி முதல் ஸஞ்சிகையைப் பூர்த்தியாகக் கடாக்ஷித்தருளி ஸாதித்த ஸ்ரீமுகத்தில் ''இந்த வுரையை இவ்வளவோடு நிறுத்த வேணும். இவ்வுரையால் ஆசார்ய முகமாகக் காலக்ஷேபம் செய்து தெரிந்துகொள்ள வேண்டிய பூர்வாசார்ய வ்யாக்யானங்கள் உள்ளே அடங்கிப்போய்விடும். இந்த உம்முடைய உரை எல்லாருக்கும் ஸௌகர்யமாக விருப்பதால் இதையே பார்த்துக் கொள்வோமென்று பூர்வாசார்ய வ்யாக்யானங்களைத் தொடாமலேயிருந்து விடுவர்கள். ஆகவே பெரியாழ்வார் திருமொழி முதற்பத்தோடு இதை நிறுத்தி விடும்'' என்று நியமித்தருளியிருந்தார். ஆனால் நிறுத்த முடியவில்லை. 350 பேர்களுக்குமேல் சந்தாதாரர்கள் சேர்ந்து முன் பணம் அனுப்பியிருந்தபடியால் தொடர்ச்சியாக நடத்தவேண்டியதாயிற்று. சின்ன கலியன் ஸ்வாமி ஸ்ரீமுகத்திற்கு ஏதோ பதில் எழுதிவிட்டு நான் தொடங்கின காரியத்தை நிறுத்தாமல் நடத்தியே வந்தேன். ஸ்வாமி ஸன்னிதிக்கும் மாதந்தோறும் ஸஞ்சிகை போய்க்கொண்டிருக்கிறது. சில மாதங்கட்குப் பிறகு ஸ்ரீ ஸ்வாமி ஸன்னிதியிலிருந்து மறுபடியும் ஸ்ரீமுகம் கிடைத்தது. ''உம்முடைய திவ்யப்ரபந்த திவ்யார்த்த தீபிகையுரை ஸாமாந்யர்களுக்கு மட்டுமல்லாமல் உயர்ந்த பண்டிதர்களுக்கும் உபகாரகமாக இருப்பதால் இது அவச்யம் நடந்து வரவேண்டியதுதான். பூர்வாசார்யர்கள் தாமும் ஒன்றுக்குப் பல வ்யாக்யானங்கள் இட்டருளியிருப்பதுபோல இந்த வ்யாக்யானமும் ஒன்றாக இருக்கலாம். தளர்ச்சி யடையாமல் இந்த திவ்யார்த்த தீபிகையை விரைவில் பூர்த்தி செய்வது நலம்'' என்று நியமனம் ஸாதித்தருளினபடி. முதலாயிரத்தின் தீபிகை முடிவுபெற்றுப் பெரிய திருமொழி தீபிகை நடந்துகொண்டிருக்கிற ஸமயத்தில் வானமாமலைக்கு விடைகொண்டு ஸ்ரீ ஸ்வாமியை ஸேவித்தபோதும் உவந்து பல வார்த்தைகள் அருளிச்செய்ய ப்ராப்தமாயிற்று.

ஸ்ரீ:

பேரருளாளன் பெருந்தேவித் தாயார் திருவடிகளே சரணம்.

ஆழ்வார் எம்பெருமானுர் ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ காஞ்சீ ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்யருடைய
எண்பத்து நான்காவது பிராயப் பிறப்புக்கு நினைவு மலரான

ச்ருதி ஸ்ம்ருதீதிஹாஸ புராணார்த்த ஸமுச்சயம்

வேத ஸம்ஹிதையிலிருந்து சில விஷயங்கள்

1. வெள்ளி நாணயம் தக்ஷிணைக்குரியதன்று

நமது யஜுர் வேதத்தில் முதல் காண்டம் ஐந்தாவது ப்ரச்நம் தொடங்குவது *தேவாஸுராஸ் ஸம்யத்தா ஆஸந்,தே தேவா விஜயமுபயந்த:* *இத்யாதி. இங்கு அக்நியைப் பற்றின ஓர் உபாக்கியானம் ஓதப்படுகிறது. அதை பாஷ்யாநுஸாரேண விவரித்தெழுதுகின்றேன். தேவர்களும் அசுரர்களும் யுத்தம் செய்கையில் வெற்றி பெற்ற தேவர்கள் அசுரர்களிடமிருந்து முத்தும் மணியுமான சிறந்த பொருள்களைக் கொள்ளைகொண்டு அவற்றைக் காப்பாற்றும் பொருட்டு அக்நி தேவனிடம் வைத்தார்கள். மீண்டு மொருகால் நமக்குத் தோல்வி விளைந்தால் அப்போது இவை நமக்கு ஆபத்தனமாயிருக்கு மென்றெண்ணி வைத்தார்கள். அவற்றை அக்நிதேவன் தானே கொள்ளை கொள்ள வெண்ணி அப்பால் நெகிழத் தொடங்கினுன். அதை யறிந்த தேவர்கள் அப்பொருள்களை மீட்டுக் கொள்ளவேண்டிப் பின் தொடர்ந்தோடினார்கள். ஓடி பலாத்காரமாகப் பிடுங்கினபோது அக்நிதேவன் அழுதான். அதனால் அவனுக்கு ருத்ரனென்கிற பெயருமுண்டாயிற்று. அவன் அழுத கண்ணீர் கீழே விழுந்து அது வெள்ளியாக ஆயிற்று. கண்ணீரின் விகாரமான வெள்ளியானது தக்ஷிணைக்குத் தகாதது. எவன் யஜ்ஞத்தில் வெள்ளி நாணயத்தை தக்ஷிணையாகக் கொடுக்கிறானே அவனுடைய இல்லத்தில் வருஷத்திற்குள் ரோதன நிமித்தமுண்டாம். ஆதலால் யஜ்ஞத்தில் வெள்ளி நாணயத்தை தக்ஷிணையாகக் கொடுக்கக்கூடாது.* *

மேலே விவரித்த வேத வாக்யத்தில் **''ரஜதம் ஹிரண்யமபவத்''** என்றும் **''ரஜதம் ஹிரண்யம் அதக்ஷிண்யம்''** *என்று மிருக்கையாலே ரஜதமென்கிற வெள்ளியும், ஹிரண்யமென்கிற பொன்னும் தக்ஷிணைக்கு அநர்ஹமென்று சிலர் சொல்லுவர்கள். அது தவறு. ஹிரண்யமென்பது தனத்திற்குப் பொதுவான வாசகம். 'ரஜதரூபமான தனம்' என்று அர்த்தமே யொழிய, வெள்ளியும் பொன்னும் என்று அர்த்தமன்று. இங்கு வித்யாரண்ய பாஷ்யபங்க்தி வருமாறு—***''ரஜத ரூபம் தநம் அபவத்; அத்ர ஹிரண்ய சப்தஸ்ய தநஸாமாந்ய வாசித்வாத் ரஜதம் ஹிரண்யமிதி**

அவிருத்தம்.'' என்று. பட்ட பாஸ்கரருடைய கருத்தும் இதுவே யாகும். வேதத்தில் ''**ஹிரண்யம் தக்ஷிணா**'' என்று நூறிடங்களில் வருகிறது; அங்கெல்லாம் ஸ்வர்ண மென்றே பொருள். இக்காலத்தவர்கள் பெரும்பாலும் ச்ராத்தத்திலுங் கூட நோட்டை [காகிதத்தை] வைத்து தக்ஷிணை கொடுப்பது ஒரு விதத்தில் நலமேயாம்.

2. பஞ்சம ஜாதி உண்டென்பதற்கு வேதத்தில் ப்ரமாணம்

முதல் காண்டத்திலேயே ஆறாவது ப்ரச்நத்தில் கடைசி யநுவாகத்தில் ''**யா தே ஜநேஷு பஞ்சஸு**'' என்று ஒரு வாக்கியம் ஓதப்பட்டுள்ளது. இங்கே ஜநசப்தத்திற்கு ஜாதியை அர்த்தமாக பாஷ்யம் செய்துள்ளார்கள். ''**ப்ராஹ்மணாதிஷு பஞ்சஸு வர்ணேஷு**'' என்றே பாஷ்யகாரர்களிருவரும் எழுதியுள்ளார்கள். இத்தால் நான்கு ஜாதிக்கு மேற்பட பஞ்சம ஜாதியென்பது சாஸ்த்ரங்களில் சொல்லப் படவே யில்லை யென்று நவீனர்கள் கூறுவது நிராதார மென்றறியக் கடவது. ''**சத்வாரோ வர்ணா:**'' என்று பலவிடங்களிலும் வருவதுண்டு; அதை யாரும் அபல பிக்கமாட்டார்கள். அதனால் பஞ்சம ஜாதி யில்லை யென்றதாகாது. *

3. துர்ப்ராஹ்மணத்வமும் தத்பரிஹாரமும்

''**யஸ்ய வேதச் ச வேதீ ச விச்சித்யேதே த்ரிபூருஷம், ஸ வை துர்ப்ராஹ்மண:**'' என்று சாஸ்த்ரங்களில் சொல்லப்பட்டுள்ளது. வேத ஸம்பந்தமும் அக்நி ஸம்பந்த முமில்லாமல் மூன்று தலைமுறை கழிந்து விட்டால் துர்ப்ராஹ்மணனாய் விடுவன். ஒரு வைதிக கருமத்திற்கும் அவன் அர்ஹனல்லன்—என்று கூறப்பட்டுள்ளது. அந்த துர்ப்ராஹ்மணத்வத்தைப் போக்கிக்கொள்ள வேணுமென்று ஒருகால் ஒரு வற்குத் தோன்றினால் அதற்கு வழியில்லையோ வென்ன, வழியுண்டென்கிறது இரண்டாவது காண்டத்தில் முதல் ப்ரச்நத்தில் பத்தாவது அநுவாகத்தின் தொடக் கத்தில். ***ஆச்விநம் தூம்ரலலாமமாலபேத யோ துர்ப்ராஹ்மணஸ் ஸோமம் பிபாஸேத்*** இத்யாதியை வைதிகர்களிடம் உணர்க. .... *

4. விச்வரூபனுடைய விசித்திரமான கதை

இரண்டாவது காண்டத்திலேயே ஐந்தாவது ப்ரச்னத்தின் தொடக்கம் **விச்வரூபாநுவாக** மென்பது. இதில் ஒரு ஆச்சரியமான கதை சொல்லப்படுகிறது. (அதாவது) த்வஷ்டாவின் மகன் விச்வரூப னென்பவன் தேவர்களுக்குப் புரோஹி தன், அசுரர்களுக்கு மருமகன். அவனுக்கு மூன்று தலைகளிருந்தன. அவை ஸோமபானத்திற்கும் ஸுராபானத்திற்கும் சோறுண்பதற்குமானவை. அவன் பலர் முன்னிலையில் தேவர்களே ஹவிர்ப்பாகங் கொள்ளத் தகுந்தவர்கள் என்பன். மறைவில் அசுரர் பக்ஷமாகவே சொல்லுவன். இப்படி விஷமப் பேச்சுள்ள விவனை வதைக்க வெண்ணின இந்திரன் வஜ்ரப் படையினால் அவனது தலைகளை யறுத்திட் டான். அறுபட்ட அம்மூன்று தலைகளும் மூன்று பக்ஷிகளாக விழுந்தன. அதனா லுண்டான ப்ரஹ்மஹத்யாபாபத்தை இந்திரன் கையேந்திப் பெற்றுக்கொண்டான். ஒரு ஸம்வத்ஸரமாகியும் ஒன்றும் செய்யாமலிருக்கவே நிந்தையுண்டாயிற்று. அதனால் பரிஹாரம் செய்து கொள்ளக் கருதிய அவ்விந்திரன் பூமண்டலத்திற்கு வந்து

சேர்ந்து பூமியை நோக்கி இப்பாபத்தில் மூன்றிலொரு பாகத்தை நீ ஏற்றுக்கொள்ள வேணு மென்ருன். அதற்கிசைந்த பூமி "என்னிடத்திலிருந்து மண்ணை வெட்டி யெடுத்தால் மறுபடியும் அந்த இடம் பூர்த்தி யடையும்படி வரம் கொடுக்கவேணும்" என்று வேண்டிக்கொள்ள, ஒருவருஷத்திற்குள் அப்படியேபூர்ணமாகக்கடவதென்று இந்திரன் வரமளித்தான். பூமி ஏற்றுக் கொண்ட பாபம் உழுமண் பூமியாயிற்று. ஆதலால் அந்த இடம் அபரிசுத்தம். பிறகு இந்திரன் வநஸ்பதி தேவதையை யடைந்து தன் பாபத்தில் மூன்றிலொரு பங்கை ஏற்றுக்கொள்ளும்படி வேண்டி ஞன். "என்னை வெட்டினுலும் மறுபடியும் முன்னிலு மதிகமாகத் தளிர்க்க வேணும்" என்று வரம் வேண்ட, அப்படியே வரமளிக்க, வ்ருக்ஷங்கள் பாபத்தில் மூன்றிலொரு பங்கை ஏற்றுக் கொண்டன. அது 'கோந்து' என்கிற பசையாக ஆயிற்று. அது அபரிசுத்தமாகையால் புஜிக்கத் தகாதது. பிறகு இந்திரன் ஸ்த்ரீகளின் திரளிலே வந்து சேஷித்துள்ள ஒரு பாப பாகத்தை ஏற்றுக்கொள்ளும்படி வேண்ட, அவர்கள் 'நாங்கள் கர்ப்பிணிகளான பின்பும் பதிபோகத்தை இழவாமலிருக்கும்படி வரமளிக்க வேணும்' என்று வேண்ட, அப்படியே வரமளித்து ப்ரஹ்மஹத்யாபாபத்தினின்றும் பூர்த்தியாக விடுபட்டான். ஸ்த்ரீகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பாபம் அவர்களு டைய மாதவிடாயாக ஆயிற்று. (இதற்குமேல்)* **தஸ்மாத் மலவத்வாஸஸா ந ஸம்வ தேத ந ஸஹாஸீத*** இத்யாதியாலே ரஜஸ்வலாஸ்த்ரீ நியமங்கள் பல சொல்லப் பட்டுள்ளன. அவளோடு பேசக்கூடாது, அவளோடு ஒருக்ருஹத்தில் வஸிக்கக் கூடாது. இத்யாதி. .... *

5. ரஜஸ்வலாஸ்த்ரீயினிடம் அன்னம் பெறலாமென்பது பற்றிய சர்ச்சை

மேலே (4ல்) விவரித்தவிடத்தில் ரஜஸ்வலாஸ்த்ரீ நியமங்கள் சொல்லி வரும்போது "**நாஸ்யா அன்னமத்யாத்**" என்றது. (அதாவது) பஹிஷ்டை தொட்ட (அல்லது) கொடுத்த அன்னத்தை உண்ணக்கூடாது என்றபடி. இதற்குமேல் "**அதோ கல்வாஹுः**" என்று பக்ஷாந்தரம் சொல்லப்படுகிறது; அஃதென்னவென் ருல், **அப்யஞ்ஜநம் வாவ ஸ்த்ரியா அந்நம், அப்யஞ்ஜநமேவ ந ப்ரதிக்ருஹ்யம், காம மந்யதிதி**" என்பதாக. இந்தவாக்யத்தின் பொருள் என்னவென்ருல், பஹிஷ்டை யிடம் அன்னம் கொள்ளலாகாதென்றது அப்யஞ்ஜநம் [தைலஸ்னனம்] கொள்ளக் கூடாதென்கை; மற்றது இஷ்டப்படியாகலாம் என்றதாகப் பொருளாகிறது. அவளிடமிருந்து எண்ணெய் வாங்கக்கூடாதென்று சிலர்; அவள் எண்ணெய் தேய்க்கக்கூடாதென்று சிலர்—என்பதாக பட்டபாஸ்கரரும் வித்யாரண்யரும் எழுது கிருர்கள். '**அந்நம் ஸத்யாமிச்சாயம் போக்தவ்யம்**" என்று வித்யாரண்ய பாஷ்ய பங்க்தி. இங்ஙனே சில அபிஜ்ஞர்கள் சொல்லுவதாக எழுதியுள்ளார். அவளோடு பேசக்கூடாது, அவளிருக்கும் க்ருஹத்திலேயே யிருக்கக்கூடாதென்று கீழே ஸ்பஷ்டமாகவுள்ளது. இது வைதிகவித்வான்கள் விமர்சிக்கவேண்டிய விஷய மென்று விடப்படுகிறது. அறிஞர் அவசியம் விமர்சித்தெழுதவேண்டும். .... *

6. ஆசார்ய பக்தியின் கனத்திருல் பெற்ற பலன்

அந்த இரண்டாவது காண்டத்திலேயே அந்த ஐந்தாவது ப்ரச்நத்திலேயே எட்டாவதநுவாகத்தில் ந்ருமேதன் பருச்சேபன் என்னுமிரு ரிஷிகளின் உபாக்கி

யானமொன்று ஓதப்படுகிறது. **[ந்ருமேதச் ச பருச்சேபச் ச ப்ரஹ்ம வாத்யமவதேதாம்]** இத்யாதி. இவ்விருமுனிவரும் நான் ப்ரஹ்மவாதியா? நீ ப்ரஹ்மவாதியா? என்று விவாதப்பட்டனர். [ந்ருமேதன் நான்தான் ப்ரஹ்மவாதி யென்கிறான், பருச்சேபன் நான்தான் ப்ரஹ்மவாதி யென்கிறான்.] இந்த விவாதம் முடிவடையவேணுமே; அதற்காக ஒரு ஈரக்கட்டையை முன்னே யெடுத்துப்போட்டு இதில் நெருப்பையுண்டாக்கவேண்டியது; யார் உண்டாக்கவல்லரோ அவரையே ப்ரஹ்மவாதியாக முடிவு செய்யவேண்டியதென்று வ்யவஸ்தை பண்ணிக்கொண்டார்கள். ந்ருமேதன் ஒரு மந்திரத்தைச் சொல்லி ஊதினான்; புகைதானுண்டாயிற்று; உடனே பருச்சேபன் ஒரு மந்திரத்தைச்சொல்லி யூதினான்; நெருப்பு எழுந்தது. பிறகு ந்ருமேதன் இவனைக் கொண்டாடிக் கூறி அப்பா! நீயும் நானும் ஒன்று சேர்ந்துதானே ஓதினோம்; நீ நெருப்பை யெழுப்பினாய், என்னால் அது முடியவில்லையே, என்னகாரணம்? என்று கேட்டான். **[ஸாமிதே நீனாமேவாஹம் வர்ணம் வேதேத்யப்ரவீத்.]** .... மருமம் மஹான்களிடமுணருக. .... *

7. வாக்குக்கும் மனத்துக்கும் உண்டான போர்

(2-5.) பதினோராவதநுவாகத்தில் **"வாக் ச மநச் சார்த்தீயேதாம்"** என்று தொடங்கி வாக்குக்கும் மநஸ்ஸுக்கும் நடந்த ஒரு ஸ்பர்த்தையும் அதன் முடிவும் ஓதப்பட்டுள்ளது. தேவர்களுக்கு நான்தான் ஹவ்யம் வஹிக்கிறேனென்று வாக்கு சொல்லிற்று; மநஸ்ஸும் அப்படியே சொல்லிற்று; விவாத சாந்திக்காக ப்ரஜாபதியிடம் சென்று கேட்டபோது அவர் வாக்கைநோக்கி 'நீ மநஸ்ஸுக்கு அடிமைப் பட்டிருக்கையாலே உனக்கு ஸ்வாதந்த்ரியமில்லை ; ஏனென்றால் மநஸ்ஸு நினைத்ததையே வாக்கு சொல்லக்கடவதாகையாலே' என்று மநஸ்ஸுக்கு ஏற்றமாகத் தீர்ப்புக் கூறினார். அதனால் கோபங்கொண்ட வாக்கானது 'ஹே ப்ரஜாபதே! நீர் எனக்குத் தாழ்வு சொன்னபடியாலே யாரும் உமக்கு வாக்காலே ஹோமம் செய்யக்கூடாது' என்று சொல்லிப்போயிற்று. ஆகவேதான் **"ப்ரஜாபதிம் மநஸா த்யாயந் ஆகாராவாகாரயதி "** என்று உபாத்பாயர்கள் சொல்லிப் போருகிறார்கள்.*

8. ப்ராஹ்மணனுக்கு ஏற்றங் கூறுதல்

(2 - 5.) அந்த அநுவாகத்தின் முடிவிலேயே ப்ராஹ்மணனுக்கு ஏற்றமாக ஓதப்பட்டுள்ளது. **"யத் ப்ராஹ்மணச் ச அப்ராஹ்மணச் ச ப்ரச்நமேயாதாம்"** இத்யாதி. (பொருள் வருமாறு) ஒரு ப்ராஹ்மணனும் மற்றொரு அப்ராஹ்மணனுங் கூடி ஏதேனுமொன்றுக்கு விவாதப்பட்டு ஒரு பெரியவரிடம் சென்று மாத்யஸ்த்யம் கோரி முடிவுசொல்லும்படி விரும்பினால் அப்பெரியவர் ப்ராஹ்மண பக்ஷபாதியாகவே யிருந்து முடிவுகூறவேண்டியது. [எதுநியாயம் எது அநியாயம் என்கிற விமர்சத்தில் புகாமல் ப்ராஹ்மணபக்ஷமாகவே சொல்லிவிடவேண்டியது] அப்படிச் சொல்லுவதானது சொல்லுபவன் தன்னை மேன்மைப்படுத்திக் கொண்டபடியாகும். அப்படிக் கூறாமல் பிராமணனுக்குத் திரஸ்காரமாகக் கூறினால் அது கூறுபவன் தன்னைத் தானே திரஸ்கரித்துக்கொண்டபடியாகும். ஆகவே ப்ராஹ்மணனுக்குத் திரஸ்காரமாகச் சொல்லக் கடவதன்று. [சிறு குறிப்பு ; * ஸ வை ப்ராஹ்மண கர்த்தப:*

யதிச் ச ச்வபசாதம: இத்யாதி விசேஷ சாஸ்த்ரங்கள் முன்னிலையில் இது ஸாமாந்ய சாஸ்த்ரமென்று கொள்ளக்கடவது]. ....

9. அக்நியின் விசித்திரமான இதிஹாஸமொன்று

(2-6) ஆறுவதநுவாகத்தில் "**அக்நேஸ் த்ரயோ ஜ்யாயாம்ஸோ ப்ராதர ஆஸந்**" என்று தொடங்கி அக்நியைப் பற்றி ஒருபாக்கியானம் ஓதப்பட்டுள்ளது. (அதாவது) அக்நிதேவனுக்குத் தமையன்மார்கள் மூவர் இருந்தனர். அவர்கள் தேவர்களுககு ஹவிஸ்ஸை வாங்குகிற குமாஸ்தாக்களாகவே யிருந்து மாண்டொழிந்தனர். அக்நிதேவன் நம் கதியும் இப்படித் தானும் போலு மென்று அஞ்சி தேவர்களுடைய கண்ணுக்குப் புலப்படாமல் மறைந்து கொள்ளக் கருதி நீரினுள்ளே நுழைந்தான். தேவதைகள் அவனைத் தேடப் புறப்பட்டார்கள். அப்போது மீன் கோள்சொல்லிக் கொடுத்தது. அக்நி இங்கே மறைந்து கொண்டிருக்கிறானென்றது: அதனால் சீற்றங்கொண்ட அக்நி மத்ஸ்யத்திற்கு சாபம் கொடுத்தான்— 'என்னை நீ காட்டிக்கொடுத்தபடியாலே (செம்படவர்கள்) வேண்டும் போதெல்லாம் உன்னை வலையில் பிடித்துக் கொல்லக் கடவர்கள்' என்று. அந்த சாபத்தின்படியே நடந்து வருகிறது. பிறகு அக்நியைப் பிடித்துக்கொண்ட தேவர்கள் 'அக்நே! இப்படி வா; முன்போல் எங்களுக்கு குமாஸ்தாவாக இரு' என்றனர். அக்நி வரமொன்று வேண்டினன். 'ஹோமம் பண்ணுவதற்காக எடுத்துக் கொண்ட த்ரவ்யம் அக்நியில் சேராமல் பரிஸ்தரணத்துக்குப் புறம்பே சிந்துமாகில் அது என் தமையன்மார்களுக்கு ஆகக் கடவது' என்று. அப்படியே ஆகி வருகிறது. .... *

10. பரஹிம்ஸையின் கொடுமை

(2-6.) பத்தாவதநுவாகத்தில் "**யோபகுராதை சதேந யாதயாத்**" என்று தொடங்கி ஒரு நீதி கற்பிக்கப்படுகிறது. அந்தணனை அடிக்க முயல்பவனுக்கு நூறு வராகன் அபராதம் விதிக்கவேண்டியது. அடிக்க முயல்வதோடு நில்லாமல் அடித்தவனுக்கு ஆயிரம் வராகன் அபராதம் விதிக்கவேண்டியது. அடித்து ரக்தஸ்ராவத்தையுண்டு பண்ணினல் ரத்தம் நிலத்தில் விழுந்து எத்தனை பரமாணுக்களை வியாபிக்குமோ அத்தனை ஸம்வத்ஸரகாலம் அவன் யமயாதனைகளை யநுபவிப்பன். ஆதலால் அந்தணனை அடிக்க முயல்வதோ அடிப்பதோ அடித்து ரக்தப்பெருக்கையுண்டாக்குவதோ கூடாது. இது ஸ்ரீபாஷ்யத்தில் கையாளப்பட்டிராநின்றது. .... *

11. அன்னம் பெறுதலும் அதனை உண்ணப் பெறுதலும்

மூன்றாவது காண்டம் நான்காவது ப்ரச்நம் மூன்றாவதநுவாகத்தில் சில காம்யேஷ்டிகள் விதிக்கப்படுகின்றன. அவற்றுள் ஒன்று; "**அக்நீஷோமீயாமாலபேத யः காமயேத அந்நவாந் அந்நாதஸ் ஸ்யாமிதி**" இத்யாதி. (அதாவது) எவன் அன்னம் வேணுமென்றும் அன்னத்தை யுண்ணுபவனுகவுமாக வேணுமென்றும் விரும்புகிறானே அவன் அக்நீஷோமீயேஷ்டியைச் செய்யக்கடவன். இந்த இஷ்டியில் இரண்டு தேவதைகள் ஆராதிக்கப்படுவதால் முதல் தேவதையான அக்நியினலே அன்னம் கிடைக்கும்; இரண்டாவது தேவதையான ஸோமனலே அந்நாதத சக்தி

கிடைக்குமென்கை. இங்குச் சிலர் சங்கிப்பதுண்டு; அன்னம் கிடைக்கவேணு மென்று விரும்பினால் போதாதா? அன்ன முண்ணப்பெற வேணுமென்று கூட விரும்பவேணுமா? என்று. இது மிகவும் ஆவச்யகமான சங்கை தான். வேத புருஷன் இங்ஙனே பல விடங்களிற் சொல்லுகிறான்; இரண்டாவது காண்டம் இரண்டாம் ப்ரச்நத்தில் "ய: **காமயேத** அந்நவாந் ஸ்யாமிதி" என்றும் "ய: **காமயேத அந்நாதஸ் ஸ்யாமிதி**" என்றும் தனித்தனியாக இரண்டு இஷ்டிகள் சொல்லப்பட் டிருக்கின்றன. தைத்திரீயோபநிஷத்தில் "**அந்நவாநந்நாதோ பவதி**" என்றோதி யிருப்பது ஸுப்ரஸித்தம். இங்ஙனே இரண்டு பலனைச் சொல்லவேண்டியது அவசியமேயாகும். ஏனென்றால் அன்ன ஸம்ருத்தி யிருந்தாலுங்கூட அதை யநுப விக்கிற சக்தி இல்லாமற் போகும். ஆகவேதான் "போஜ்யம் போஜந சக்திச் ச ரதி சக்திர் வராங்கநா, விபவோ தாநஸம்பத்தி:, நால்பஸ்ய தபஸ: பலம்." என்று மேலை யார் சொல்லி வைத்தார்கள். போஜ்யஸம்ருத்தியுள்ளவர்களுக்கு போஜநசக்தியில் வைகல்யத்தைக் கட்கூடாகக் காணுகின்றோம். இவ்விஷயத்தை ஆழ்ந்து நோக்கு மளவில், **அந்நவாந்** என்பதற்கு வஸுதேவரையும், **அந்நாத:** என்பதற்கு நந்தகோப ரையும் லக்ஷ்யமாகக் கொள்ளலாம். பகவானை பிள்ளையாகப்பெற்ற வத்தனையே வஸுதேவர்க்காதலால் அவர் **அந்நவாந்** என்னத் தகுந்தவராயினர். "நந்தன் பெற்றனன் நல்வினையில்லா நங்கள்கோன் வசுதேவன் பெற்றிலனே" என்று தெய்வத்தேவகி புலம்பும்படியாக அநுபவமெல்லாம் நந்தகோபர்க்காகையாலே இவர் அந்நாதரென்னத் தகுந்தவராயினர். இதனை அந்யத்ர விவரித்துரைத்திருக்கிறேன்.

12. கர்ம காண்டத்திலும் பரப்ரஹ்மத்தின் பெருமை

நாலாவது காண்டம் முதல் ப்ரச்நத்தில் எட்டாவதநுவாகத்தில் ***ஹிரண்ய கர்ப்பஸ் ஸமவர்த்ததாக்ரே*** என்று தொடங்கி எட்டு ருக்குக்கள் '**கஸ்மை தேவாய ஹவிஷா விதேமே** என்று ஒரே விதமான முடிவோடு கூடியவையாய் விளங்குகின்றன. கர்ம காண்டத்திலும் பரப்ரஹ்ம ப்ரபாவ ப்ரதிபாதநமுள்ளதென்று அடியேன் பரக்க வுபந்யஸிப்பதுண்டு. அதற்குப் பொருத்தமாக ஸம்ஹிதையிலும் ப்ராஹ்மணத்திலும் பல ஸ்தலங்கள் எடுத்துக் காட்டப் பாங்கானவையுண்டு; அவற்றுள் இந்த ஸ்தலம் மிக முக்கியமானது. தைத்திரீயோபநிஷத்தில் உத்தரநாராயணத்தில் "**அத்ப்யஸ் ஸம்பூதோ ஹிரண்யகர்ப்ப இத்யஷ்டௌ**" என்று வைதிகர்களனைவரும் ஸமரீதியாக ஓதிவருகிறார்கள். இங்கு "**ஹிரண்ய கர்ப்ப இதி அஷ்டௌ**" என்றது ஸம்ஹிதையில் நாலாவது காண்டத்தில் ஓதப்பட்டு வருகிற எட்டுருக்குக்களையும் இங்கே ஓதவேண் டியது என்றபடி. இவ்விதமாக ஸகல பாஷ்யகாரர்களும் அர்த்தம் செய்திருப்பதனால் இது நிர்விவாதம். இதனால் இந்த எட்டுருக்குக்களும் நாராயணபரங்களென்பது ஸ்பஷ்டமாகத் தேறிநின்றது. இவற்றை வேறொரு தேவதாபரமாக ஒதுக்குவ தற்குச் சிறிதும் ஔசித்யம் கிடையாது. இவற்றில் இரண்டு ருக்குக்களைமட்டும் இங்கு விவரிக்கின்றேன். [**ஹிரண்யகர்ப்ப: அக்ரே ஸமவர்த்தத.**] ஸஹஸ்ர நாமத்தில் *ஹிரண்ய கர்ப்போ பூகர்ப்ப:* என்று ஹிரண்ய கர்ப்பனைக் கூறப்பட்ட நாரா யணனொருவனே மூந்துறமுன்னமிருந்தனன். அவன் எப்படிப்பட்டவன்? [**பூதஸ்ய ஜாத : பதிரேக ஆஸீத்**] ஸகல ப்ராணிவர்க்கங்களுக்கும் அத்விதீயசேஷி. இன்னும்

அவனுடைய ப்ரபாவம் எத்தகைத்து ? [ஸ தாதார ப்ருதிவீம் த்யாமுதேமாம்] அவனே உபயவிபூதி நிர்வாஹகன். ப்ருதிவீம் உத த்யாம்—மண்ணுலகையும் விண்ணுலகையும் என்றபடி. (உத) என்னுமவ்யயம் ஸமுச்சயார்த்தகம். [கஸ்மை தேவாய ஹவிஷா விதேம.] ஸஹஸ்ரநாமத்தில் *ஏகோநைகஸ் ஸவ: க: கிம்* என்றவிடத்தில் (கிம் என்று) கிம்சப்தநிர்திஷ்டனை அந்த நாராயணனுக்கு ஹவிஷ்யம் நிவேதநம் பண்ணக்கடவோம் என்கை. (இந்த எட்டுருக்குக்களும் திருவாராதனத்தில் விநியோகிக்கப்படுமவை) மற்றொரு ருக்கு: —* ய ஆத்மதா பலதா- யஸ்ய விச்வ உபாஸதே ப்ரசிஷம் யஸ்ய தேவா- யஸ்ய ச்சாயா அம்ருதம் யஸ்ய ம்ருத்யு: கஸ்மை தேவாய ஹவிஷா விதேம] ஆத்மதா*. எற்பரனென்னை யாக்கிக்கொண்டு எனக்கே தன்னைத் தந்த கற்பகம்* என்கிற திருவாய்மொழியின்படியே முற்றூட்டாக அநுபவிக்கும்படி தன்னையே தருமவன் எம்பெருமான், பலதா- —* குலந்தரும் செல்வம் தந்திடும்.......வலந்தரும் * என்ற திருமங்கையாழ்வா ரருளிச் செயலின்படியே தன்னை யநுபவிக்கைக் கிடான தேஹபல மனோபலங்களை யருள்செய்பவன். [யஸ்ய ப்ரசிஷம் விச்வே தேவா உபாஸதே] * ஆணைமெய்பெற நடாய தெய்வம் மூவரில் முதல்வனுகி * என்று திருவாசிரியத்திலருளிச் செய்தபடியே எம்பெருமானுடைய ஆணையை ஸகல தேவர்களும் சிரமேற் கொள்ளுகின்றார்கள். ப்ரசிஷம்—ஆஜ்ஞாம் என்றபடி. [அம்ருதம் ம்ருத்யு- யஸ்ய ச்சாயா] மோக்ஷபூமியும் ஸம்ஸாரபூமியும் அவனிட்ட வழக்கு.

13. கீழ்ப்பட்ட தேவதையும் மேற்பட்ட தேவதையும்

ஐந்தாவது காண்டம் ஐந்தாவது ப்ரச்நம் முதலநுவாகத்தில் ஸ்ரீமஹாவிஷ்ணுவின் பாரம்யம் ஸுஸ்பஷ்டமாக வோதப்பட்டிருக்கின்றது ;-[அக்நிரவமோ தேவதாநாம் விஷ்ணு: பரம:] 'தேவதாநாம்' என்றது நிர்தாரணே ஷஷ்டி. தேவதைகளுக்குள்ளே கீழ்ப்பட்ட தேவதை அக்நி. 'இவற்கு மேற்பட்ட தேவதை இல்லை' யென்னும்படியான பரமதேவதை ஸ்ரீமஹாவிஷ்ணு. இப்படிச்சொன்ன பாரம்யத்தை மேலே ஆறுவது காண்டத்தில் இரண்டாம் ப்ரச்நத்தில்* தேஷாமஸுராணும் திஸ்ர: புர ஆஸந்* என்று தொடங்கிச் சொல்லுமுபாக்கியானம் நிலைநாட்டுகின்றது.

14. த்ரிபுர ஸம்ஹார வ்ருத்தாந்தம்

(6-2.3) * தேஷாமஸுராணும் திஸ்ர: புர ஆஸந் * இத்யாதி. அஸுரர்களுக்கு மூன்று பட்டணங்களிருந்தன ; ஒன்று இரும்பு மயமானது ; மற்றொன்று வெள்ளி மயமானது ; இன்னொன்று பொன்மயமானது. [அந்தப் பட்டணங்களைக் கொண்டு அவ்வசுரர்கள் தேவர்களுக்கு ஹிம்ஸையை விளைத்துக் கொண்டிருந்தார்கள்.) தேவர்கள் வெற்றிபெற முடியாதவர்களா யிருந்தனர். பிறகு ஒருபாயம் செய்து வெல்லத் தொடங்கினர். தே இஷும் ஸமஸ்குர்வத—அவர்கள் அம்பை ஸித்தப்படுத்தினர். அந்த அம்புக்கு எப்படி மிடுக்கு உண்டாயிற்றென்ன, [விஷ்ணும் தேஜநம்] திருமங்கையாழ்வார் பெரிய திருமொழியில் (6-1-3) * குழல் நிறவண்ண ! நின் கூறு கொண்ட தழல் நிறவண்ணன் நண்ணார் நகரம் விழ, நனி மலை சிலை வளைவு செய்து அங்கு அழல்நிற அம்பது வானவனே ! என்றருளிச் செய்திருப்பது கொண்டு (விஷ்

ணும் தேஜனம்) என்பதற்குப் பொருள் காணவேணும். திருவாய்மொழியில் (3-10-4ல்) பாணாஸுரபங்க கதையை யருளிச் செய்யுமிடத்து அந்தப் போரில் சிவபிரானும் தலையிட்டா னென்பதைச் சொல்லுகின்ற ஆழ்வார்* திரிபுரம் செற்றவனும்* என்கிற சொல்லால் சிவபிரானைக் குறித்தனர். அங்கு நம்பிள்ளை யீடு;—"த்ரிபுரதஹந ஸமயத்திலே வில்லுக்கு மிடுக்காயும், நாணிக்குத் திண்மையாயும், அன்புக்குக் கூர்மை யாயும் தனக்கு அந்தராத்மாவாயும் எதிரிகளைத் தலை சாயும்படி பண்ணி த்ரிபுரத்தை யழித்துக் கொடுத்தா னெம்பெருமான்; அத்தை யறியாதே அஜ்ஞானவர்கள் இத்தை அவன் தலையிலே வைத்துக் கவிபாட; இத்தைத் தானுங்கேட்டு மெய்யிறே யென்று மயங்கி 'அது செய்த நமக்கு இவனை வெல்லத் தட்டென்?' என்று வந்து எதிரிட்டானாயிற்று," என்று. இதுநிற்க. மேலே யெடுத்த "**தேஷாமஸுராணாம்**" இத்யாதி வேதோக்த கதையின் முடிவு காணவேணும். [**தே அப்ருவந் க இமா மஸிஷ்யதீதி**] அம்பு ஸித்தமாய் விட்டது ஸரி. இதை யெடுத்து எய்ய வல்லவன் யாவன்? என்கிற கேள்வி பிறந்தது. [**ருத்ர இத்யப்ருவந்**] அப்போது ருத்ரனைக் குறிப்பிட்டார்கள். அவனைக் குறிப்பிட்டதற்குக் காரணம் சொல்லுகிறது உடனே [**ருத்ரோ வை க்ரூர:, ஸோஸ்யது இதி**] ருத்ரன் தான் கொடியவன், அவன் எய்யட்டு மென்றார்களாம்; உடனே ருத்ரனை நோக்கி எய்யச் சொன்னபோது [**ஸோப்ரவீத் வரம் வ்ருணை. அஹமேவ பசூநாம் அதிபதிரஸாநீதி**] நான் பசுபதியாயிருக்கும்படி வரங் கொடுத்தால் எய்கிறேனென்றானாம் ருத்ரன். அப்படியே வரங்கொடுத்த பின்பு எய்தானென்று மேலே சொல்லிற்று. ருத்ரன் பரதேவதையா யிருந்தால் வரம் வேண்டுவனா? என்பதை ஆராய வேணும். ...."

15. ப்ராஹ்மணன் மூன்று கடன்களுடன் பிறத்தல்

(6-3-10) * **பசுமாலப்ய புரோடாச** மென்கிற அநுவாகத்தில் [**ஜாயமானோ ஹ வை ப்ராமஹ்ணஸ் த்ரிபி: ருணவா ஜாயதே**] பிராமணன் பிறக்கும்போது மூவர்க் குக் கடன் பட்டவனாய்ப் பிறக்கிறான். அம்மூவர் ரிஷிகளும் தேவர்களும் பித்ருக்களு மாவர். வேதாத்யயனம் பண்ணி ரிஷிகளின் கடனைத் தீர்க்கக் கடவன். தேவ பூஜை பண்ணி தேவர்களின் கடனைத் தீர்க்கக் கடவன். ப்ரஜோத்பாதநம் பண்ணிப் பித்ருக்களின் கடனைத் தீர்க்கக் கடவன். எனவே, வேதமோதி தேவதாராதனம் பண்ணி ஸந்தான ஸம்பந்நனாயிருப்பவன் யாவனோ அவனே கடன்கள் தீர்ந்தவன் என்றதாயிற்று. .... *

16. ப்ராஹ்மணன் வைத்யம் செய்யக்கூடாதென்பதுபற்றி

(6-4-9) * **யஜ்ஞஸ்ய சிரோச் சித்யத** * என்று தொடங்கி ஒருபாக்கியானம் ஓதப்பட்டுள்ளது. (அதாவது) யஜ்ஞ தேவதையின் தலை அறுபட்டது. அப்போது தேவதைகள் அச்விநி தேவர்களை நோக்கி, 'நீங்கள் மருத்துவர்களல்லவா? இந்த அறுபட்ட தலையை மறுபடியும் சேரப் பண்ணுங்கள்' என்றார்கள். அவர்கள் ஒரு வரங் கேட்டுப் பெற்றுக்கொண்டு அப்படியே தலையை ஒட்ட வைத்தார்கள். பிறகு தேவர்கள் சொன்னார்கள்—இந்த வைத்யர்கள் அசுத்தர்கள்; ஆகவே பிராமணன் வைத்யம் செய்யக் கூடாது; ஏனென்றால் [**அபூதோ ஹி ஏஷ: அமேத்ய: யோ பிஷக்**]

வைத்ய னென்பவன் மிகவும் அபரிசுத்தன்........முடிவாகச் சொல்லியிருப்பதாவது **[உதபாத்ரமுபநிதாய ப்ராஹ்மணம் தக்ஷிணதோ நிஷாத்ய பேஷஜம் குர்யாத்]** உதக பாத்திரத்தை அருகே வைத்து ஒரு ப்ராஹ்மணனைத் தென்புறமாக உட்கார வைத்துப் பிராமணன் வைத்யம் செய்வது. .... *

17. நிமந்த்ரணத்தில் போக்தா செய்யும் ஆசீர்வாதம்

(7-5. 18) ***ஆப்ரஹ்மந் ப்ராஹ்மணோ ப்ரஹ்மவர்ச்சஸீ ஜாயதாம்*** இத்யாதி. இது அந்நஹோம மந்த்ரம். [நிமந்த்ரித ப்ராஹ்மணர் ஊணத்யாயம் படிக்கும் மந்த்ரமிது.] இதன் பொருளாவது—ப்ராஹ்மண ஜாதியில் ப்ரஹ்மவர்ச்சஸியாய் ச்ரோத்ரியனான ப்ராஹ்மணன் எங்கு முண்டாக வேண்டும். இந்த ராஷ்ட்ரத்தில் ஆயுதப்ரயோக குசலனாய் சூரனாய் மஹாரதியான க்ஷத்ரியன் உண்டாகக் கடவன். நன்றாகக் கறக்கவல்ல பசு உண்டாகுக. சுமை தாங்கவல்ல எருது உண்டாகுக. வேகமாகச் செல்லவல்ல குதிரை யுண்டாகுக. அழகிய மாதர் உண்டாகுக. இந்த யஜமானனுக்கு மிகச்சிறந்த குணசாலியான மகனுண்டாகுக. எங்களுக்கு வேண்டும் பொழுதெல்லாம் மழைபெய்க. ஓஷதிகள் நன்றாக விளையட்டும். யோக க்ஷேமங்களும் சிறந்திடுக. (கிடைக்காதது கிடைப்பது யோகம்; கிடைத்தது ஸம்ரக்ஷிதமாயிருப்பது க்ஷேமம்.) .... *

வேதத்தில் ப்ராஹ்மணத்தில் சில விஷயங்கள்

ஸம்ஹிதைக்கு அடுத்தது ப்ராஹ்மணம். மூன்று அஷ்டகங்கள், அச்சித்ராச்வமேதம், அருணகாடகம் இவை ப்ராஹ்மணமெனப்படும்.

18. நக்ஷத்ர கணனையில் க்ருத்திகைக்கு ப்ராதாந்யம்

முதலஷ்டகத்தில் (1) இரண்டாமநுவாகம் ***க்ருத்திகாஸ்வக்நிமாதத்த*** இத்யாதி. உலகில் நாம் நக்ஷத்ர பரிகணனை பண்ணும்போது 'அச்விநீ பரணி க்ருத்திகை' என்று கணக்கிட்டு வருகிறோம். வேதத்தில் க்ருத்திகையே முதலாக வெடுக்கப்படுகிறது. **''முகம் வா ஏதந் நக்ஷத்ராணாம். யத்க்ருத்திகா:'** என்று இந்த அநுவாகத்தில் ஸ்பஷ்டமாகச் சொல்லப்படுகிறது. ஸம்ஹிதையில் நாலாவது காண்டத்தில் எல்லா நக்ஷத்திரங்களையும் வரிசையாக ஓதிவருமிடத்து **'க்ருத்திகா நக்ஷத்ரமக்நிர் தேவதா'!** என்று இதுவே முதலிடப் பட்டது. **''அக்நிர் ந: பாது க்ருத்திகா:''** இத்யாதிகளுங் காண்க. இப்படி யிருக்க லோகத்தில் க்ருத்திகைக்கு ப்ரதமகணநம் வாராமைக்கு ஹேது வென்னென்னில், அதுவும் இவ்வநுவாகத்திலேயே ஸூசிதமாகிறது; **[அதோ கலு. அக்நிநக்ஷத்ராமித்யபசாயயந்தி. க்ருஹாந் ஹ தாஹுகோ பவதி.]** கீழே இந்த நக்ஷத்திரத்திற்குச் சிறப்புச் சொல்லப்பட்டு, அதற்கு மாறாக

இப்போது இழிவு சொல்லப்புகுவதால் **(அதோ கலு)** என்பது அதற்கு அவதாரிகை யாகும். என்ன இழிவு? என்னில் பெரியோர்கள் அக்நி நக்ஷத்ரமென்று இழிவு கூறுகின்றார்கள். அந்த நக்ஷத்ரத்திலே செய்யும் யஜமானனுடைய வீட்டைக் கொளுத்தி விடும் இந்த தேவதை ....இதை யிட்டே லோகத்தில் இந்த நக்ஷத்ரத்திற்கு ப்ரதம பரிகணனை இல்லை போலும். வேறு காரணமுமிருக்கலாம். .... *

19. மனிதர்களின் உணவுக்கட்டளை

முதலஷ்டகம் நான்காம் ப்ரச்நம் ஒன்பதாமநுவாகத்தில் - பித்ருக்கள், மனிதர்கள், பசுக்கள், அஸுரர்கள் முதலானோர்க்கு போஜன வேளைகள் நியமிக்கப் படுகிறது. மனிதர்களுக்கும் பசுக்களுக்கும் நியமித்திருப்பதை மட்டும் தெரிவிக்கிறேனிங்கு. [**தஸ்மாத் த்விரஹ்நோ மநுஷ்யேப்ய உபஹ்ரியதே. ப்ராதச் ச ஸாயஞ் ச........ தஸ்மாத் த்ரிரஹ்ந: பசவ: ப்ரேரதே. ப்ராதஸ் ஸங்கவே ஸாயம.**] பகலிலும் இரவிலுமாக இரண்டு வேளைகளில் மனிதர்களுக்கு போஜனமென்றும், ப்ராத:காலம் ஸங்கவ காலம் ஸாயங்காலம் ஆகிற மூன்று வேளைகளில் பசுக்களுக்கு உணவு என்றும் இங்கே ச்ருதி சொல்லுகிறது. சாஸ்த்ரவச்யமல்லாத பசுக்களைப் பற்றி வ்யவஸ்தை யேது? அதுபற்றி விசாரம் வேண்டா. **'மநுஷ்யேப்ய:'** என்று பொதுப்பட மனிதர்களை யெடுத்திருந்தாலும் மானிட வகுப்பில் சாஸ்த்ரங்களுக்குக் கட்டுப்படாத திரள்கள் பல்லாயிர முண்டே; அவற்றை விலக்கி சாஸ்த்ரவச்யர்களான வகுப்பினரை மட்டுங் கொண்டால் இந்த சாஸ்த்ரம் ஸங்குசித விஷயமாகும். நூல் வரம்புக்குக் கட்டுப்பட்ட பரம வைதிகர்கள் "**ருதம் த்வா ஸத்யேந பரிஷிஞ்சாமீதி ஸாயம் பரிஷிஞ்சதி. ஸத்யம் த்வர்த்தேந பரிஷிஞ்சாமீதி ப்ராத:*** என்று பரிஷேசநமந்த்ரம் இரண்டு வேளைகளுக்கு மட்டுமே உள்ளதனால் இரண்டு வேளைகள் தவிர வேறொரு வேளை எதுவும் உட்கொள்ள மாட்டார்கள். இடைப்பலஹாரங்கள் கடைப்பலஹாரங்கள் அணுகமாட்டா. பகவத் ஸந்நிதிகளில் அகாலங்களில் ப்ரஸாதம் கிடைத்தால் "**ஆமலக மாத்ரம் க்ருஹ்ணீயாத்**" என்னும் சாஸ்த்ரத்தை யடியொற்றி நெல்லிக்காயளவு ப்ரஸாதம் ஸ்வீகரிப்பர்கள். .... *

20. ஸ்வாதீ நக்ஷத்திரத்தில் விவாஹத்தின் சிறப்பு

(1—5.) இரண்டாவதநுவாகத்தில்—ஸ்வாதீ நக்ஷத்திரத்தில் விவாஹம் பண்ணிக் கொடுக்கப்படுகிற கன்னிகையைப் பற்றி ஒரு விநோதம் சொல்லுகிறது, [**யாம் காமயேத துஹிதரம் ப்ரியா ஸ்யாதிதி. தாம் நிஷ்ட்யாயாம் தத்யாத்: ப்ரியைவ பவதி. நேவ து புநராகச்சதி**] எந்த மகளை பர்த்தாவுக்கு மிகவும் ப்ரீதிபாத்ரமாயிருக்கவேணுமென்று பிதா விரும்புகிறாரோ, அந்த மகளை ஸ்வாதீ நக்ஷத்திரத்தில் விவாஹம் பண்ணிக்கொடுக்க வெண்டியது. [**நிஷ்ட்யா**—ஸ்வாதீ.] அப்படியே அம் மகள் பர்த்தாவின் பரமப்ரீதிக்குப் பாத்திரமாகிறாள்: அதனால் அவள் மறுபடியும் பிதாவின் க்ருஹத்தை நோக்கி வருவதே கிடையாது. (இது இந்த ஸ்வாதீ நக்ஷத்திரத்திற்கு நிந்தையா? ஸ்துதியா? என்று விமர்சிக்கப் புகுந்த பாஷ்யகாரர் நிந்தையன்று, ஸ்துதிதானென்று நிஷ்கரிஷிக்கிறார். பிதா விரும்பியபடி பதியின் அதிசயித ப்ரீதியை விளைப்பதனால் என்று காரணம் காட்டுகிறார்.] ஜநக சக்ரவர்த்தி ஸீதா

பிராட்டியை ஸ்வாதீ நக்ஷத்திரத்தில் கந்யகாப்ரதானம் பண்ணியிருப்பர் போலும்; "பிராட்டி பெருமாளைக் கைப்பிடித்த வனந்தரம் ஸ்ரீமிதிலையை நினையாதாப்போலே" என்று ஆசாரியர்கள் அருளிச் செய்வதனுல். ....*

21. ப்ராஹ்மணத்தில் ராமக்ருஷ்ண ப்ரஸ்தாவம்

(1—4.) நாலாவதநுவாகத்தில்* **நக்தம் ஜாதா ஸ்யோஷதே. ராமே க்ருஷ்ணே அஸிக்நி ச*** என்றோதப்பட்டுள்ளது. இங்கு ராமனையும் க்ருஷ்ணனையும் ப்ரஸ்தாவித்திருப்பதாகச் சிலர் ப்ரஸங்கம் செய்யக் கேட்டதுண்டு. சப்த ச்ரவணமாத்ரத்தைக் கொண்டு அப்படிச் சொல்லுவது நமக்கும் இஷ்டந்தான். ஆனல் அங்குப் பொருள் வேறுபடுகின்றது. **ராமே க்ருஷ்ணே !** என்பவை ஸ்த்ரீலிங்க ஸம்போதந பதங்கள். "சரீரம் ரமணீயம் கரோதீதி ராமா. ஸ்வயம் க்ருஷ்ணவர்ணு" என்று பாஷ்யம். இந்த மந்த்ரம் ஒரு ஓஷதிவிசேஷத்தை விளித்துச் சொல்லுவது. ச்வேத குஷ்ட ரோக விநாசநமந்த்ரமிது. ....*

22. விஷூசிகா வ்யாதியின் பரிஹாரம்

(2—6.) இரண்டாவதநுவாகத்தில் * **யா வ்யாக்ரம் விஷூசிகா** * இத்யாதியான ருக்கை விஷூசிகாவ்யாதி படருங் காலத்தில் ஆவ்ருத்தி பண்ணினுல் நலமென்று பெரியார் கூறுவர். இதன் பொருளாவது, புலி காட்டு நாய் ச்யேநபக்ஷி சிங்கம் ஆகியவற்றுக்கு இந்த வியாதி காண்பதில்லை. ஏனென்றூல், உண்டது ஜரிக்காமையினுல் இந்த வியாதி ஏற்படுகிறதென்றும் அவற்றுக்கு ஜீரண சக்தியுண்டென்றும் பாஷ்யத்திலுள்ளது. இந்த வியாதியானது யஜமானனை விட்டு அகலக் கடவது என்று சொல்லிற்றுகிறது. லௌகிக மருந்துகளைக் காட்டிலும் இத்தகைய வேத வாக்யங்களும் சிறந்த மருந்தென்பது வைதிகர்களின் கொள்கை.

23. பாடபேத ஆராய்ச்சி

(2—7.) பதின்மூன்றுவதநுவாகத்தில் * **உதத்யதாச்வச்வியம்** * இத்யாதியில் "**அக்ரே விக்ஷூ ப்ரதீதயத்**" என்று பாடம் ஓதப்பட்டு வருகின்றது, (ஹே அக்நே!) என்று வித்யாரண்ய பாஷ்யமுள்ளது. இரண்டாமஷ்டகத்திற்கு பட்ட பாஸ்கர பாஷ்யம் லுப்தமாகையாலே அவருடைய பாடம் தெரிந்துகொள்ள முடியவில்லை; எங்கும் (**அக்ரே**) என்கிற பாடந்தான் ஓதப்பட்டு வருகிறது. இங்கு பாஷ்யகாரர்க்கு ப்ரமாதமா? அல்லது பாடம் தவறுதலாக வந்து விட்டதா? என்பது ஆராயத்தக்கது (அக்ரே) என்பதற்கே (அக்நே) என்று பொருள் ச்சாந்தஸமாகச் சொல்லலாமென்பது ஸமஞ்ஜஸமாகத் தோன்றவில்லை. .... *

24. வாயுதேவதையின் அபேக்ஷாவிசேஷம்

மூன்றுமஷ்டகத்தில் முதல் ப்ரச்னத்தில் நாலாவதநுவாகத்தில் நக்ஷத்திரங்களுக்குச் சிறப்புச் சொல்லி வருகையில் ஸ்வாதீநக்ஷத்ரப்ரகரணத்தில் ***வாயுர் வா அகாமயத*** என்று தொடங்கிச் சொல்லப்பட்டிருப்பதாவது-எல்லா விடங்களிலும் தட்டுத் தடங்கலில்லாமல் யதேஷ்டமாக ஸஞ்சரிக்கப் பெறவேணுமென்று

விரும்பிய வாயுதேவதை ஸ்வாதீ நக்ஷத்திரதேவதையைக் குறித்து இஷ்டி செய்ய, அப்படியே பேறு பெற்றதாக ஓதிற்று: தைத்திரீயோபநிஷத்தில் ***பீஷாஸ்மாத் வாத: பவதே*** என்று பரமபுருஷனிடத்தில் அஞ்சி நடுங்கிக் கொண்டு வாயு எப்போதும் ஓய்வின்றித் திரிந்து கொண்டிருப்பதாக ஓதப்பட்டுள்ளது. தான் இஷ்டி செய்து அதன் பலனைக் காமசாரம் பெற்றிருந்தால் இஷ்டமானபோது ஓடவும் ஓய்வெடுத்துக் கொள்ளவுங் கூடும்; பரமபுருஷனிடத்தில் அஞ்சி நடுங்க வேண்டிய அவசியமில்லையே யென்று சிலர் கேட்கக்கூடும். ஸமந்வயம் பண்ணி நிர்வஹிக்க வேண்டியது பெரியவர்களின் கடமை. .... *

25. அந்தணன் கையில் அக்நியுள்ளது

மூன்றாவது அஷ்டகத்தின் ஏழாவது ப்ரச்நம் **அச்சித்ர** மென வழங்கப் பெறும். அதில் மூன்றாவது அநுவாகம் ***வி வா ஏஷ இந்த்ரியேண*** இத்யாதி. அக்நியில் ஹோமம் பண்ணவேண்டும். அந்த அக்நியானது அரணியில் நின்றும் மதனம் செய்யப்பட்டுக் கொள்ளப்படவேண்டும். யஜமாநனுடைய கரண பாடவக் குறைவினால் ஸமயத்தில் அது பெற முடியாமற் போனால் லௌகிகாக்நியைக் கொள்ளலாம். அதுவும் கிடைக்காமற்போனால் ஆட்டைக் கொண்டுவந்து அதன் வலது காதில் ஹோமம் செய்வது. ஆட்டின் பாலைக் குடிக்கலாகாது. குடித்தால் செய்த ஹோமம் பாழாய்விடும். ஆடும் கிடைக்காமற் போனால் ப்ராஹ்மணனுடைய வலது கையில் ஹோமம் செய்வது. ப்ராஹ்மணனென்பவன் ஸாக்ஷாத் அக்நியேயாவன். அவனது கையில் ஹோமம் பண்ணினால் அக்நியிலேயே ஹோமம் பண்ணினதாகும். பிராமணனை க்ருஹத்தில் நின்றும் விரட்டக் கூடாது; பிராமணன் கிடைக்காவிடில் தர்ப்பங்களில் ஹோமம் செய்வது. அதுவும் கிடைக்காவிடில் தீர்த்தத்தில் செய்வது. ....இதில் ப்ராஹ்மணனுடைய ஹஸ்தத்திற்கு ஏற்றம் சொல்லப்பட்டிருப்பதை நாம் காப்பாற்றிக் கொள்ளவேணும்; கம்பர் தமது ராமாயணத்தில் ஸித்தாச்ரம வர்ணன ப்ரகரணத்தில் குறட் பிரமசாரியைச் சொல்லுகையில் **"அனற்படுகையன்!"** என்கிறார். அது இந்த ச்ருதியைக் கேட்டிருந்ததனாலே போலும்.

26. தர்ப்பணத்தில் ஆஸந மந்த்ரத்தின் பொருள்

(3—7.) நாலாவதநுவாகத்தில்* **ஸக்ருதாச்சிந்நம் பர்ஹிரூர்ணம்ருது ஸ்யோநம்*** என்கிற மந்த்ரம் படிக்கப்படுகிறது. இது பித்ருதர்ப்பணம் செய்கிறவர்களுக்கெல்லாம் கண்டபாடமான மந்திரம். இதன் பொருளாவது: ஒரே தடவை கிள்ளப்பட்ட தர்ப்பம்; பஞ்சுபோல் மெல்லியது; ஸுகரமானது. இப்படிப்பட்ட தர்ப்பமே! உன்னைப் பித்ருக்களுக்காகப் பரப்புகிறேன். இங்ஙனம் பரப்பப்பட்ட தர்ப்பத்தில் என்னுடைய பித்ருபிதாமஹப்ரபிதாமஹர்கள் தம்தம் அநுசரர்களோடு கூட வீற்றிருக்கக் கடவர்கள் என்கை. [மந்த்ரார்த்தம் தெரிந்திருப்பது நலம்.]

27. நம்மைப் பிறர் நிந்திக்கும்போது நாம் செய்யத் தக்கது

அதிலேயே மேல் ஆறாவதநுவாகத்தில் ஒரு மந்த்ரம்—***யோ ந சபாத் அசபத:*** இத்யாதி. சிலரால் நமக்கு நிந்தை நேரும்போது இந்த மந்த்ரத்தைச் சில முறை

வருஷகாலம் ஓதின வேதமாகும்; மலைமலையாயிருக்கிற வேதங்களை நீர் ஓதினவரல்லீர்; வேதங்கள் அனந்தங்களென்பதைத் தெரிந்துகொள்வீராக' என்று சொல்லி, பிறகு அவர்க்குண்டான நிர்வேதத்தை ஸாவித்ரவித்யோபதேசத்தாலே தீர்த்துச் சென்றனன். [அந்த ஸாவித்ரவித்யை எது? என்பது உபதேச கம்யம்.] .... *

31. நசிகேதஸ்ஸின் யமலோக கமனமும் புநராவ்ருத்தியும்

காடகம் இரண்டாம் ப்ரச்நத்தில் எட்டாவதநுவாகம் [***உசந் ஹ வை வாஜச்ரவஸஸ் ஸர்வவேதஸம் ததௌ*** இத்யாதி.] இதில் ஒரு தரும மருமம் சிக்ஷிக்கப்படுகின்றது கேண்மின். இது நாசிகேதோபாக்யான மெனப்படும். தசோபநிஷத்தில் மூன்றாவதான கடோபநிஷத்தின் உபக்ரமமும் இதுவே யாகும். அங்குச் சொல்லுகிற உபாக்கியானம் ஒரு விதம். இங்குச் சொல்வதைக் கேளீர். வாஜச்ரவஸரென்பவர் ஒரு பலனை விரும்பி ஸர்வஸ்வதக்ஷிணகமான வொரு யாகத்தைச் செய்து ஸர்வஸ்வத்தையும் தானம் பண்ணிக்கொண்டிருந்தார். அவருக்கு நசிகேதஸ்ஸென்று ஒரு மகனிருந்தான். தகப்பன் தக்ஷிணைகள் கொடுத்துக் கொண்டிருக்கையில் இவன் சிறுவனாகையாலே தானும் ஒருவர்க்கு தக்ஷிணையாகக் கொடுபட வேணுமென்றெண்ணித் தந்தையை நோக்கி 'என்னை யாருக்கப்பா கொடுக்கப் போகிறாய்?' என்ன, தந்தை பதில் சொல்லாமல் வாளாவிருந்தான், மகன் மீண்டு மீண்டும் கேட்டான். அதனால் கோபங்கொண்ட தந்தை 'உன்னை யமனுக்குக் கொடுக்கப் போகிறேன் போ' என்றான். உடனே யமனிடம்போவதாக மகன் எழுந்தான். அப்போது ஆகாசவாணி சொல்லிற்று.—'குமரனே! யமன் வெளியூர் போயிருக்கும் ஸமயத்தில் நீ அவனிருப்பிடம் சென்று சேர்ந்து மூன்று நாள் ஒன்றும் உட்கொள்ளாமல் உபவாஸமாக இரு. பிறகு யமன் வந்து சேர்ந்து 'நீ இங்கு வந்து எத்தனை நாளாயிற்று?' என்று கேட்பன். மூன்று நாளாயிற்றென்று சொல்லு. முதல் நாள் என்ன புஜித்தாயென்று கேட்பன். உன் பிரஜைகளை புஜித்தேனென்று சொல்லு. இரண்டாநாள் என்ன புஜித்தாயென்று கேட்பன்; உன் பசுக்களை புஜித்தேனென்று சொல்லு. மூன்றாநாள் என்ன புஜித்தாயென்று கேட்பன்; உன்னுடைய ஸுக்ருதங்களை புஜித்தேனென்று சொல்லு. (என்று சொல்லிற்று ஆகாசவாணி.) பிறகு அவ்வண்ணமாகவே, யமன் வெளியே போயிருந்தபோது நசிகேதஸ்ஸு யமக்ருஹம் சென்று சேர்ந்து மூன்று நாள் உபவாஸமிருந்து பிறகு யமன் வந்த பிறகு அவ்வாறே வினா விடைகள் நடந்தன. [இதனால் என்ன தேறிற்று? நமது வீட்டில் ஒருவன் வந்து உபவாஸமிருந்தால் ப்ரஜா-பசு-ஸுக்ருதங்கள் அழிந்து போய் விடுமென்றதாகத் தேறிற்று.] இதைத் தெரிந்து கொண்ட யமன் மிக்க அநுதாபங்கொண்டு நசிகேதஸ்ஸை வணங்கி மூன்று வரங்கள் வேண்டிக்கொள்ளும்படி சொன்னான். மீண்டும் தகப்பனாரிடம் வந்து சேரும்படிக்கும், இஷ்டாபூர்த்தங்களில் குறையில்லாதபடிக்கும், மறுபடியும் தனக்கு ம்ருத்யுவே யில்லாதபடிக்கும் வரங்கள் வேண்டிக்கொண்டு அப்படியே பெற்றான். .... *

32 எம்பெருமானுடைய அவதாரத்தைப் பற்றி

காடகம் மூன்றாவது ப்ரச்நத்தில் ***பிதா புத்ரேண பித்ர்மாந் யோநியோநௌ. நாவேதவிந் மநுதே தம் ப்ர்ஹந்தம்*** என்று பகவானுடைய விபவாவதாரம் ஓதப்

ஆவருத்தி செய்வது நலமென்று பெரியார் கூறுவர். இதன் பொருளாவது: நம்மைச் சிலர் நிஷ்காரணமாகவும் நிந்திக்கிறார்கள், ஸகாரணமாகவும் நிந்திக்கிறார்கள்; அவர்களிடத்திலே அஹோராத்ர தேவதைகளானவை நம்முடைய பாபங்களைத் திரட்டிக்கொண்டு போய் வைக்கட்டுமென்கை. .... *

28. அச்வமேதக் குதிரையைக் கொண்டு போமவர்

மூன்றாவதஷ்டகம் பன்னிரண்டு ப்ரச்நங்கள் கொண்டதென்றும் ஏழாவது ப்ரச்நம் அச்சித்ரமென்றும், 8, 9ஆம் ப்ரச்னங்கள் அச்வமேதமென்றும் 10, 11, 12ஆம் ப்ரச்னங்கள் காடகமென்றும் மேலையார் சொல்லுவர்கள். அச்வமேதத்தில் மேத்யமான குதிரையை யஜ்ஞபூமிக்குக் கொண்டுவர வேண்டும்போது கொண்டுவர வேண்டியவர்களைச் சொல்லுகிறது—*ய: **பிதுரநுஜாயா: புத்ர: ஸ புரஸ்தாந் நயதி. யோ மாதுரநுஜாயா: புத்ர: ஸ பச்சாந்நயதி*** இதன் பொருளாவது—யஜமாநனுடைய அத்தைமகன் முன்னே பிடித்துக்கொண்டு போகவேண்டியது; அவனுடைய சிறிய தாயார் மகன் பின்னால் தள்ளிக்கொண்டு போகவேண்டியது. [வேத புருஷன் இப்படி விதித்ததன் காரணத்தைப் பெரியார்களிடம் கேட்டுணர்வது.]

29. கல்யாண பஞ்சாதியின் ஆராய்ச்சி

காடகத்தின் உபக்ரமம் *ஸம்ஜ்ஞாநம் விஜ்ஞாநம்* இத்யாதி. இதில் ஆறுவாக்யங்களைக் கல்யாண பஞ்சாதியாகச் சொல்லிவருகிறார்கள். ஆறாவது வாக்யத்தின் முடிவு (**கல்யாண:**) என்றிருப்பதனால் அதுகொண்டு இதைக் கல்யாண பஞ்சாதியாக வழங்குகிறார்கள். இங்கு ஒரு மருமம் தெரிவிக்கவேண்டியதாகிறது. இந்த ஆறு வாக்கியங்களில் முப்பது நாமங்கள் ஓதப்பட்டிருக்கின்றன. சுக்லபக்ஷ திதிகளும் க்ருஷ்ணபக்ஷ திதிகளுமாகிய முப்பது திதிகளின் நாமங்கள் இவை—என்று அங்கேயே மேலே பத்தாவதநுவாகத்தில் விளக்கப்பட்டுள்ளது. அதன்படி (**கல்யாண:**) என்பது அமாவாஸ்யையின் பெயராகத் தேறுகின்றது. ஆனாலும் அர்த்தத்திலே த்ருஷ்டியில்லாமல், சப்தம் நல்லதாக ச்ரவிக்கிறதென்பதையே கொண்டு இதைக் கல்யாணபஞ்சாதியாக வழங்கி வருகிறார்களென்று கொள்வது *

30. வேதங்கள் அனந்தங்கள் என்பது பற்றிய உபாக்யானம்

காடகத்தில் கடைசியநுவாகத்தில் வேதங்கள் அனந்தங்களென்பதுபற்றி பரத்வாஜோபாக்யானமொன்று ஓதப்பட்டுள்ளது. [**பரத்வாஜோ ஹ த்ரிபிராயுர்ப்பிர் ப்ரஹ்மசர்யமுவாஸ இத்யாதி.**] முந்நூறு வருஷம் ஜீவித்திருக்கும்படி தேவேந்திரனருளால் பரத்வாஜமுனிவர் வரம்பெற்றிருந்தார். அந்த முந்நூறு ஆண்டுகளிலும் வேதாத்யயனமே பண்ணிப்போந்தாரவர். ஜீவிதம் முடிந்து சரமதசையானவாறே தேவேந்திரன் வந்து 'மறுபடியும் உமக்கு நூறு பிராயம் கொடுப்பதாக வந்திருக்கிறேன்; இந்த நூற்றாண்டில் என்னசெய்ய விரும்புகிறீர்?' என்று கேட்டான். (கடந்த முந்நூறாண்டில் மூன்று வேதங்களை ஓதிமுடித்ததாக எண்ணியிருந்த முனிவர் இப்போது நூறாண்டு கிடைத்தால் நான்காவது வேதத்தையும் ஓதிமுடிக்கலாமென்றெண்ணி) அந்த நூற்றாண்டிலும் வேதமே யோதுவேனென்றார். பிறகு இந்திரன் இதுவரையிலும் பாராத மிகப்பெரிய மூன்று மலைகளைக் காட்டி அவற்றிலிருந்து மூன்று முஷ்டியளவான மண்களை யெடுத்து 'இவையே நீர் முந்நூறு

பட்டது. இவ்விரண்டு வாக்யங்களின் பொருளாவது—எம்பெருமான் ஸர்வலோக பிதா; அவன் ஒருவர்க்கும் மகனாகத் தகுந்தவனல்லன்; ஆனாலும் தனக்குப் புத்ர ப்ராயரானவர்களையே பிதாவாகக் கொண்டு* எங்கின்ற யோனியுமாய்ப் பிறக்கிறான். வேதமோதாதவர்கள் அவன் பெருமையை யறியகில்லாரென்கை. .... *

33. தைத்திரியாரண்யகத்தில் நட்பின் சிறப்பு

தைத்திரீயாரண்யகத்தில் முதல்ப்ரச்நம் மூன்றாமநுவாகத்தில் *யஸ் தித்யாஜ* என்று தொடங்கி நான்கு வாக்கியங்களில் ஸ்நேஹத்தின் சிறப்பு (அல்லது) ஸ்நேஹத்ரோஹத்தின் இழிவு கூறப்படுகின்றது. [ய: **ஸகிவிதம் ஸகாயம் தித்யாஜ**] (தித்யாஜ) என்பது ச்சாந்தஸரூபம். தத்யாஜ என்றபடி, ஒரு பரம ஸாத்விகன் ஒருவனைத் தனக்கு ஆப்த ஸௌஹ்ருத்தாகச் சொல்லிக்கொண்டிருக்கும் போது அவன் துர்ப்புத்தியினால் இந்த ஸாத்விகனைக் கைவிட்டிட்டு 'இவன் எனக்கு நண்பனல்லன்' என்று சொல்லிக்கொண்டு திரிவனேல் அந்த மித்ரத்ரோஹிக்கு வேதசாஸ்த்ராத்யயனத்திலும் அதிகாரமில்லை. ஒருக்கால் அவன் அத்யயனம் பண்ணினாலும் அது பாழ்தான். அவனுக்கு ஸௌஹ்ருதபத்ததியே தெரியாதென்கை.

34. ருத்ரன் தலையறுப்புண்டது

அந்த முதல் ப்ரச்நத்திலேயே ஐந்தாமநுவாகத்தில் ருத்ரனைப்பற்றி ஓர் இதிஹாஸம் ஓதப்பட்டுள்ளது. திருவாய்மொழியில்* உயர்வற வுயர்நலப் பதிகத்தில் எட்டாம் பாட்டில்* புரமொரு மூன்றெரித்து* என்றவிடத்து ஈடுமுப்பத்தாறாயிரத்தில்

''தான்பூட்டின நாணி தன்கழுத்தை யறுத்துக்கொண்டு போகா தொழியும்போதும் ஈச்வரன் அந்தராத்மாவாய் நிற்கவேணும்''

என்கிற ஸ்ரீஸூக்தி காண்கிறது. ருத்ரன் தான் பூட்டின நாணி தன்கழுத்தை யறுத்துக்கொண்டு போனகதை எங்குள்ளதென்றால் இங்கேயுள்ளது. இங்கு [***விச்வே தேவா விப்ரஹரந்தி*** என்று தொடங்கிச் சொல்லப்பட்ட இதிஹாஸமாவது; தேவர்கள் ஆயுதங்களைக் கொண்டு போர்புரிய ஆயத்தமாயினர். ருத்ரன் தன்னுடைய வில்லை ஊன்றிக்கொண்டு நின்று [**நைவ தேவோ ந மர்த்ய:. ந ராஜா வருணோ விபு:. நாக்நிர் நேந்த்ரோ ந பவமாந:. மாத்ருக் கச்சந வித்யதே.**] தேவர்களோ மனிதர்களோ ராஜாக்களோ வருணனோ அக்னியோ இந்த்ரனோ வாயுவோ யாரானாலும் சரி; என்னைப் போன்றவர்கள் யாருமே கிடையார்கள் என்றான். இப்படிச் சொன்னவன் ருத்ரன். ஸாயணபாஷ்யத்தில் ''**ஸோயம் விச்வைர் தேவை ருத்கோஷிதச் சப்த:**'' என்றுள்ளது. இறு தவறென்றும்; ருத்ரன் உத்கோஷித்த சப்தராசிகளிவை யென்றும் வேதாந்த கௌஸ்துபகாரர் உபபத்திகளுடன் எழுதியுள்ளார் அது தான் பொருத்தமாகக் காண்கிறது. மேலுள்ள கதையும் அதையே நிலைநாட்டுகின்றது. [**திவி அஸ்ய ஏகா தநுரார்த்னி:**] இந்த ருத்ரதநுஸ்ஸின் ஒருநுனி ஆகாசத்தை யளாவியுள்ளது. [**ப்ருதிவ்யாம் அபரா ச்ரிதா**] மற்றொருநுனி பூமியின் கீழே தாக்கியுள்ளது. ஜகதுபஸம்ஹாரமே நடக்கும்போல் தோன்றிநின்றது. அப்போது இந்திரனுக்கு ஓர் உபாயம் தோன்றிற்று. என்ன செய்தானென்னில், [**தஸ்யேந்த்ரோ வம்ரிரூபேண. தநுர்ஜ்யாம் அசிநத் ஸ்வயம்.**] இந்திரன் செல்லு என்கிற ஜந்துக்களின் வடிவுகொண்டு (கீழே பரவி) அந்த வில் நாணியை அறுபட்டதாம்படி செய்துவிட்டனன். செல்லுமென்றதனால் நாணி இற்றொழிந்ததென்கை. பிறகு என்னாயிற்று? [**ததிந்த்ரதநுரித்யஜ்யம். அப்ரவர்ணோஷு சக்ஷதே.**] இந்த வில்

ஆகாசத்தில் போய் விழுந்திட்டது. சில ஸமயங்களில் மேக மண்டலத்தில் வில் ரேகை நாணியின்றிக்கே காணப்படுவதுண்டே, அதை இந்த்ர தநுஸ்ஸென்று சொல்லுகிறார்கள். செல்லு வடிவுகொண்ட இந்திரனால் அறுபட்ட தநுஸ்ஸென்றும் அதனால்தான் நாணியில்லாமல் தென்படுகிறதென்றும் சொல்லுகிறார்கள். இந்த வில் அறுபட்டு எழும்பிப் போம்போது வெறுமனே போகவில்லை;] **ருத்ரஸ்யத்வேவ தநுராார்த்நி:. சிர உத்பிபேஷ.]** ருத்ரன் தலையைப் பொடிபண்ணிவிட்டுப் போயிற்று. பிறகு அந்தத் தலை ஒட்டப் படுகிற வரலாறு உள்ளது. .... *

35. மந்தேஹர் நாடோறும் மடிதல்

ஆரண்யகம் இரண்டாம் ப்ரச்நம் இரண்டா மநுவாகம் ஸந்த்யாவந்தனத்தின் ஆவச்யகத்வத்தைத் தெரிவிப்பதற்காகப் பழங்கதை யொன்று சொல்லுகிறது. **[* ரக்ஷாம்ஸி ஹவா புரோநுவாகே * இத்யாதி.]** முற்காலத்தில் ராக்ஷஸர்கள் தீவ்ரமான தவமொன்றைச் செய்தார்கள். அதனால் உகப்படைந்த ப்ரஜாபதியான வர் 'நீங்கள் தவஞ்செய்தது போதும், வரம் வேண்டிக்கொள்ளுங்கள்' என்றார். 'நாங்கள் ஸூர்யனோடு யுத்தம் செய்யவேணும்; இந்தவரம் கொடுப்பீராக' என்றார்கள் அரக்கர்கள்; அப்படியே யநுமதி யளித்தார் ப்ரஜாபதி. ஸூர்யன் உதித்ததுமுதல் அஸ்தமிக்குமளவும் யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது. அந்தணர்கள் காயத்ரியை ஜபித்து அளிக்கும் அர்க்கய தீர்த்தத்தினால் அவர்கள் மாண்டொழிகிறார்கள்.

நம்மாழ்வாருடைய முதற்பிரபந்தமான திருவிருத்தத்தில் (82) * எரிகொள் செந்நாயிறு * என்கிற பாட்டில் "மீண்டவற்றுள் எரிகொள் செந்தீவீழ் அசுரரைப் போல" என்பதனால் இந்த வைதிக கதை அநுஸந்திக்கப் பட்டுள்ளது. அவ்விடத்தில் அடியேனுடைய திவ்யார்த்ததீபிகையில் எழுதியுள்ளதாவது—"....மந்தேஹாருண மென்னும் த்வீபத்தில் வாழும் மந்தேஹரென்னும் அசுரர்கள் உக்ரமான தவத்தைச் செய்து பிரமனிடத்து வரம்பெற்று அதனால் செருக்கடைந்து எப்பொழுதும் ஸூர்யனை வளைத்து எதிர்த்துத் தடுத்துப் போர்செய்கின்றனரென்றும், அந்தணர் முதலியோர் ஸந்தியா காலங்களில் மந்த்ர பூர்வகமாகக் கையிலெடுத்துவிடும் அர்க்கய தீர்த்தங்கள் வஜ்ராயுதம் போலாகி அவர்கள்மேல் விழுந்து அவர்களை அப்பால் தள்ளி ஸூர்யனுடைய ஸஞ்சாரத்துக்குத் தடையில்லாதபடி செய்கின்றனவென்றும், அந்தணர் முதலியோர் செலுத்தும் அர்க்கியத்தின் ஆற்றலால் ஸூர்ய மண்டலத்தி னிடையே ஒரு செந்தீ யெழுந்து ஜ்வலிக்க (விளக்கில் விட்டில் போல்) அத்தீயில் அசுரர்கள் விழுந்து மாண்டுபோகின்றனரென்றும் ஓதப்பட்டுள்ளது." என்று.

ஆசார்ய ஹ்ருதயத்தில் (53.) "புரவியே ழொருகாலுடைய தேரிலே" இத்யாதி சூர்ணையின் வியாக்கியானத்தில் மணவாள மாமுனிகள் அருளிச் செய் திருப்பது—"மந்தேஹரென்பார் சில ராக்ஷஸர்; ஸந்த்யா ஸமயத்திலே ஆதித்ய ரதத்தைச் சுற்றிக்கொண்டு போகவொட்டாதே ஆதித்யனோடே மஹாயுத்தம் பண்ணி அவனைக் கொல்லத் தேடுவர்களாய், அவ்வளவிலே ப்ராஹ்மணர் காயத்ரியபிமந்த்ரிதைகளான அப்புக்களை அர்க்கய ரூபேண ஊர்த்வமாகப்ரக்ஷேபிக்க, அந்த காயத்ரீபூத—அர்க்கய சக்தியாலே ஆதித்ய மண்டலத்திலே ஜ்வலித்துக் கொண்டு தோற்றின சிவந்த அக்நியிலே விழுந்து முடிந்து போவார்கள்...." ....